# தமிழ் முரசு

முதற் புத்தகம்

பதிப்பாசிரியர் :

ம. பொ. சிவஞான கிராமணியார்

233, லிங்கி செட்டி தெரு,

சென்னை 1.

1946-ஆம் வருடம் மே மாதம்
உரிமை பதிவுசெய்யப்பட்டது.

# பொருளடக்கம்


| | | | பக்கம். |
|---|---|---|---|
| 1. | முரசு கொட்டடா! .... | குயிலன் | 1 |
| 2. | தமிழ்நாடு ... | திரு. வி. க. | 2 |
| 3. | போராட்டம் ... | மு. வரதராசனார் | 7 |
| 4. | தமிழகத்தில் தமிழ்முரசு!... | ம. பொ. சி. | 15 |
| 5. | முடிவல்ல, தொடக்கம் ... | குருசாமி | 31 |
| 6. | "தீ" .... | க. தங்கவேலன் | 39 |
| 7. | வீரக் கண்ணகி ... | ம. பொ. சி. | 40 |
| 8. | தமிழ்க் கருவூலம் ... | சி. வேங்கடசாமி | 51 |


## விலை ஆறணா

இரண்டாவது புத்தகத்திலிருந்து விலை நாலணா

"தமிழ் முரசு" முதற் புத்தகத்தைத் தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றோம். இதில் பல குறைபாடுகள் இருப்பினும் அதைப் பொறுத்து எங்களது முயற்சிக்குப் பேராதரவு தருமாறு தமிழினத்தவரைத் தாள்பணிந்து வேண்டுகின்றோம்.

அடுத்த புத்தகம் இதைவிடச் சீரிய முறையில் வெளிவருமென்பது எங்கள் நம்பிக்கை. இதில் எவ்வித ஜாதி, மத, கட்சி வேற்றுமைகளுக்கும் இடமின்றி தமிழ் வளர, தமிழர் வாழ, தமிழகம் செழிக்கப் பாடுபடுவதே தமிழ் முரசு பதிப்பகத்தாரின் நோக்கமாகும்.

**வாழ்க தமிழ் மொழி!** **வாழ்க தமிழினம்!!**

தமிழ் முரசு பதிப்பகத்தார்.

Printed at Haddon & Co., Printers, 49, Badrian St., Madras—
Paper Issue Card No. M. S. No. 486.

# முரசு கொட்டடா!

(குயிலன்)

---

கொட்டடா முரசினை
ஊதடா கொம்பினை
குவலயத்தில் தமிழொலிக்கக்
குமுறுகின்ற கடலதென்று (கொ)

வெட்டடா மடமையை
வீழ்த்தடா வறுமையை
வீரரென்ற பேர்படைத்த
தீரரென்று மார்புதட்டிக் (கொ)

எட்டிட முரசொலி
எங்கணும் எதிரொலி
ஏழை யென்று தமிழகத்தில்
யாருமில்லை என்றுசொல்லிக் (கொ)

மட்டிலா வளங்களும்
வரையிலாச் செல்வமும்
வளர்க கல்வி வளர்க கலைகள்
வளர்க வளர்க வளர்கவென்று (கொ)

# தமிழ் நாடு

திரு. வி. க.

(சிற்றில் பேச்சு)

---

உலகத்தில் பல நாடுகள் இருக்கின்றன. அவைகளுள் ஒன்று தமிழ் நாடு. எண்ணிக்கையில் ஒன்றுயினும் அந்நாடு மற்ற நாடுகளுக்கு உயிர் போன்றது என்று கூறலாம். இதற்குக் காரணங்கள் பலபடப் பகரலாம். அவற்றுள் ஈண்டுக் குறிக்கத் தக்கன இரண்டு. ஒன்று தொன்மை; இன்னென்று நாகரிகம்.

*　　*　　*

தமிழ் நாடு தொன்மை வாய்ந்தது. இது குறித்து எழுந்த ஆராய்ச்சிகள் பலப்பல; திரண்ட நுட்பங்கள் பலப்பல. அப்பலப்பல, லெமூரியன் ஆராய்ச்சி, மொகஞ்சதாரோ—ஹாரப்ப காட்சி என்னும் இரண்டில் அடங்கும். ஆகவே, தமிழ் நாட்டின் தொன்மையைப்பற்றி விரித்துக்கூற வேண்டுவதில்லை.

*　　*　　*

ஒரு நாட்டின் தொன்மைமட்டும் அதன் விழுப்பத்தை உணர்த்துவதாகாது. தொன்மையுடன் வேறென்றுந்தேவை. அது நாகரிகம். தொன்மையும் நாகரிகமும் ஒன்றி உருக்கொண்ட நாடு தமிழகம். ஆதலின், அது விழுப்ப முடையதாகிறது. கிரீஸ், பாபிலோன், எகிப்து, சாலடியம் முதலிய நாடுகள் தொன்மை வாய்ந்தனவே. ஆனால் அவைகளின் நாகரிகத்துறைகள், இற்றைஞான்று நிலவுகின்றனவா? இல்லை. ஏன்? அவைகளின் நாகரிகத் துறைகளின் அடியில் "சத்" இன்மையே ஆகும்.

ஒரு நாட்டின் நாகரிக உயிர்ப்பே அந்நாட்டின் தொன்மையைக் காப்பது: தொன்மை மட்டும் ஒரு நாட்டின் மாண்பைக் காப்பதாகாது.

* * *

தமிழ் நாட்டின் நாகரிகத்திலுள்ள விழுப்பம் யாது? தமிழ் நாடு தனது நாகரிகத்தினின்றும் பிறந்த கலைகளின் ஊடே பொதுமை, இறைமை, பொறுமை முதலிய நல்லியல்புகளைப் பரிணமிக்கச் செய்தமையான், அதன் நாகரிகம் விழுப்ப முடையதாயிற்று. அதன் நூல்களில் இந்நல்லியல்புகள் மிளிர்வதை இன்றும் காணலாம்.

* * *

தமிழன் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றில் பெரிதும் தன் கருத்தை இருத்தினன். அவன் வீட்டின்மீது பெரிதும் கருத்தை இருத்தினன் இல்லை. அறம், பொருள், இன்பம் மூன்றன் அடைவே-வீடு-என்பது அவன்தன் கருத்து. வீட்டுக்கெனத் தனி முயற்சி வேண்டுவதில்லை. ஒருவன் அறவழி நின்று, பொருள் ஈட்டி, அவ்வழியே இன்பம் நுகர்வானாயின், அவன் அடைவது வீடு என்பது தமிழன் கண்ட உண்மை

* * *

அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றனுள் வாழ்க்கைக்குமிக இன்றியமையாதது பொருள். அப்பொருண்மை, பொதுமையில் அமைந்தால் அறமும் இன்பமும் நன்னெறியில் நிகழும். பொருட் பொதுமையைப் பண்டைத் தமிழன் கண்டமையால், அவன் அறவோனாய், எந்நாட்டவர்க்கும் தீமை புரியாத பெருந்தகைமை உடையவனாய் வாழ்ந்தான். "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்பது அவனது குறிக்கோள்.

* * *

இக்குறிக்கோளைப் பொருளாகக் கொள்வதில், இறைமை பொலியும் என்பதை விளக்க வேண்டுவதில்லை. பொதுமை வாழ்வே, இறைமை வாழ்வு என்று கூறல் மிகையாகாது. இத்தகைய வாழ்வினின்றும் பல கடவுளர் உணர்வு, பலசமயக் கருத்து தோன்றுங்கொல்? தோன்ரு. "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" எனவரூஉந் திருமூலர் திருமொழியை நோக்குக.

*　　*　　*

பொதுமையும், இறைமையும் பொதுளுமிடத்தில் பொறுமை பிறங்குவது இயற்கை. தமிழன் கண்ட 'பொறுமை', இந்நாளில் 'அஹிம்சை' என்று வழங்கப்படுகிறது. ஈண்டுப் பொறுமை என்றது, கோழைமையையோ, மடிமையையோ உணர்த்துவது அன்று. அஞ்சாத வீரநெஞ்சத்தினின்றும் பிறப்பதே பொறுமை. விளக்கம், திருக்குறள் "பொறுமை"யைப் பார்க்க.

*　　*　　*

இம்மூன்றனுலும் ஆக்கப்பெற்ற தமிழ் நாடு இப்பொழுது காட்சி அளிக்கிறதோ? இல்லை. வெறும் தமிழ்நாட்டு மண்ணே காட்சி அளிக்கிறது. பழந்தமிழ்நாடு பழைய ஏடுகளில் உறங்கிக் கிடக்கிறது. அதுமீண்டும் உயிர்த்தெழுமா? எழாதா? என்னும் ஐயமும் சில இடங்களில் பிறந்துள்ளது. தமிழனை தலைவேறு, கைவேறு, கால்வேறு. உடல்வேறு—வேறு வேருகப் பிளவுண்டு கிடத்தலை உன்ன உன்ன ஐயம் மட்டுமா தோன்றும்? அழுகையும் தோன்றுமன்றே? தமிழன் தனது நிலையை—தனது பழம்பெரு நிலையை—நினையாது திரிகிருன். அந்தோ! அந்தோ!

*　　*　　*

தமிழ்நாடு மீண்டும், உயிர்பெற்றெழ என் செய்தல்வேண்டும்? 'தமிழன்' முதலாவது, தன்னைத் தமிழன் என்று உணர்வது சிறப்பு. தமிழன் என்னும் உணர்வு, தமிழ்நாட்டு உணர்வாகப் பெருகும். தமிழன் வேறல்ல; அவனது நாடு வேறன்று. தானும், நாடும் ஒன்று என்று வீறு கொண்டு எழும் உள்ளம் தேவை. அவ்வுள்ளம் என் செய்யாது! கிளர்ச்சி செய்யும்; புரட்சி செய்யும்; புதிய் தமிழகத்தைக் காணும்.

* * *

இக்காட்சிக்கு உரியவாய்ப்பு இப்பொழுது தோன்றியுள்ளது. அது பாரத நாட்டின் உரிமைக் காட்சியாகும். இங்கிலாந்தினின்றும் மூன்று அரசியல் அமைச்சர் இந்தியா போந்து உரிமை வழங்க முனைந்து நிற்றல் வெள்ளிடைமலே. அன்னோர் முனையினும், முனையாதொழியினும் நமது இமய நாடு உரிமை பெற்றே தீரும்.

* * *

இந்நாளில், தமிழ் நாடு இமய நாட்டின் உரிமையைக் காக்கவும், அதன் வாயிலாக உலக அமைதியை நிலைபொறுத்தவும் முயலுதல் வேண்டும். அம் முயற்சி இப்போது பொதுமை அறத்தை அடிப்படையாகக் கொண்டு எழுவதாயிருத்தல் வேண்டும்.

* * *

தமிழனது பண்டைப் பெருமையெல்லாம் பொதுமை அறத்தை அடிப்படையாகக் கொண்டவை என்பதை மறத்தலாகாது. ஆகவே, தமிழன் பொதுமை உணர்வுடன் தொண்டாற்ற முந்துவானாக!

* * *

தமிழன் முதலாவது தனக்கென்று ஓர் அரசியலைக் கோலிக் கொள்ளுதல் நலம். அவ்வரசியல் பாரத அரசியலுடன் கலப்புறல் சிறப்பு. அச்சிறப்பு, உலகுக் குரியதாய் அமைதல் மாண்பு.

* * *

இக்கால நல்லரசியலுக்கு இன்றியமையாதது பொருண்மை. அப்பொருண்மை ஒருபால் பெருகியும், மற்றொருபால் அருகியும் பயன்படுதல்கூடாது. இல்லார்—உள்ளார் என்னும் வேற்றுமை, உலகைப் பலதிற இடுக்கண்களுக்கு உட்படுத்தி, அடிக்கடி பெரும் போரை எழுப்புவது இயல்பாகியது. இதனால் மக்களுக்கு உணவு முட்டு, உடை முட்டு, வாழ்க்கை முட்டு முதலியன விளைந்த வண்ணம் இருக்கின்றன. இவ்விளைவைப் பொருட் பொதுமையே மாற்ற வல்லது. இது தமிழ்நாட்டுக்குப் புதியதன்று; பழமையே. பழமையுடன், சில புதுமை விரிவு சேர்தல் வேண்டும். சேர்ந்தால், 'புது உலகம்' உருக்கொள்ளும்.

* * *

பழந்தமிழ்க் கலைகள் பொதுமை, இறைமை, பொறுமை முதலியவற்றை அறிவுறுத்துவன என்று மேலே சொல்லப்பட்டது. அக்கலைகளின் வழி அக்காலத்துக் கேற்ற சமூகம் அமைந்தது. இப்பொழுது சமூகம் என்பது, உலகத்திற்குரியதாய் பரந்து விரிந்து வருதல் கண்கூடு. உலக ஒருமைப் பாட்டை பண்டை நாளிலேயே அறிவுறுத்திய தமிழ் நாடு தன் அறக்கருவிகளாய கலைகளைக் கொண்டு, இற்றை ஞான்றும் அறிவுறுத்தலாம். தமிழன் கலை, தமிழகத்திற்கு உரியது; பாரதநாட்டிற்குரியது; உலகுக்குரியது. தமிழ் பொதுமை. பொதுமை வாழ்க! தமிழ் நாடு வெல்க!!

# போராட்டம்!

(மு. வரதராசனர்)

"ஏன் அழுகிருய்?" என்று சின்னவனைக் கேட்டாள் தாய். "அண்ணன் அடித்தான்" என்று அவன் தேம்பி யழுதான்.

"ஏன் அடித்தாய்?" என்று பெரியவனைக் கேட்டாள். "என் புத்தகத்தைக் கிழித்தான்" என்று அவன் சினத்தோடு முணு முணுத்தான்.

சின்னவன் குழந்தை; வயது மூன்று. பெரியவன் பள்ளிக்கூடப் பையன்; வயது ஒன்பது. இவனுக்கும் அவனுக்கும் ஓயாத போராட்டம். இந்தப் போராட்டத்திற்கு ஒரு நாளும் விடுமுறை இல்லை. சின்னவனே பெரியவனே வெளியூருக்குப் போயிருக்கும் போதுதான் இருவருக்கும்விடுமுறை. சின்னவன் தாயுடன் எங்காவது போனால், பெரியவன் வீட்டில் தனியே சோம்பலாய்க் கிடப்பான். பெரியவன் பள்ளிக்கூடத்திற்குப் போனால், சின்னவன் விளையாட்டுத் துணை இல்லாமல் வாடியிருப்பான். பள்ளிக்கூடத்திலிருந்து வந்த உடனே, ஓடிப்போய், "அண்ணா, அண்ணா" என்று ஆரவாரம் செய்வான்.

அண்ணன் பள்ளிக்கூடத்திற்குப் போயிருக்கும் போது அவனுக்குத் தெரியாமல் தாய் செய்த தின்பண்ட விவரத்தையெல்லாம் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தவுடனே அவனிடம் கொஞ்சமும் பொறுக்காமல் சொல்லி விடுவான். தான் செய்த செயலையெல்லாம் வந்தவுடனே ஓடிப்போய் முத

வில் சொல்லுகிறவன் இவன்தான். வீட்டில் இருவருக்குமாக வாங்கி வைத்திருந்த இரண்டு ஆரஞ்சு பழத்தையும் தான் ஒருவனே தின்று விடுவான். "அண்ணாவுக்குச் சொல்லாதே, அம்மா" என்று தாயிடமும் சொல்லி விடுவான். "அண்ணாவுக்கு எங்கே அப்பா" என்று கேட்டால், "அண்ணாவுக்கு வேண்டாம் போ" என்று உறுதியாகவும் மறுத்திடுவான். ஆனால் அண்ணன் வந்தவுடனே, "அண்ணா! நானு—பழம்—இரண்டு பழம்—தின்னு" என்று அவசர அவசரமாகச் சொல்லி விடுவான். அந்த ஏமாந்த அண்ணன் தாயிடம் ஓடிப்போய், "தம்பிக்கு மட்டும் கொடுத்தாய்! எனக்கு எங்கே அம்மா பழம்?" என்று முறையிட்டால் அவள் திண்டாடுவாள். "ஏண்டா சொன்னாய்" என்று கேட்டால் "சொன்னேன்" என்பான். மறுபடியும் கேட்டால், "அண்ணாவுக்குப் பழம் இல்லே. ஆய்விட்டது, போ" என்று அஞ்சாமல் தயங்காமல் சொல்லி விடுவான்.

இவ்வளவும் பள்ளிக்கூடத்திலிருந்து அண்ணன் வந்த சிறிது நேரத்திற்குள் நிகழ்ந்து முடிந்துவிடும். பிறகு, வழக்கம்போல் அண்ணன்—தம்பி—போராட்டம் நிகழும்.

தனக்கென்று பலகையும் பலப்பமும் அண்ணன் வைத்திருப்பதைத் தம்பி கவனிக்கின்றான். எடுக்க முயல்கின்றான். அண்ணன் தடுக்கும்போது அழுகின்றான். அழுது அழுது வல்லமை பெறுகின்றான். பிடிவாதம் செய்கின்றான். மெல்ல மெல்ல வெற்றியும் பெறுகின்றான். தாயின் முயற்சியாலும் வேண்டுகோளாலும் அண்ணன் இணங்குகின்றான். பலகையும் பலப்பமும் தம்பியின் கைக்கு வருகின்றன. அவற்றை உடைத்து

விடுவானே என்று அண்ணன் அஞ்சுகின்றான்; வாங்கிக்கொள்கின்றான். ஒரு நாள் பலகை உடைகின்றது. உடைந்த பலகை தம்பி கைக்கு வருகின்றது; மகிழ்ச்சியும் தருகின்றது. அண்ணன் மறுபடியும் கேட்காமல் தனக்கே கொடுத்து விட்டதை எண்ணித் தம்பி மகிழ்கின்றான். ஆனால் மகிழ்ச்சி நிலைப்பதில்லை. அண்ணன் கையில் புதுப் பலகை அழகாக வந்து சேர்கின்றது. அதைக் கண்டதும் தம்பி போராட்டத்தைத் தெளிவாகத் தொடங்குகின்றான். "எனக்கு அது வேண்டும்" என்று தாயைக் கேட்கின்றான். தாய் திகைக்கின்றாள். "இது என்னுடையது; அது உன்னுடையது" என்ற தனியுடைமைப் பேச்சு வருகின்றது. அதை மாற்றிச் சொல்லுகின்றான் தம்பி. தாய் என்னென்னவோ சொல்லிப் பார்க்கின்றாள். அறிவும் அன்பும் பயன்படாமை கண்டு போலீஸ்காரன் ஆகின்றாள்; அடிப்பதாகச் சொல்லிப் பயப்படுத்துகின்றாள். சிலநாள் அது வெற்றி தருவதுபோல் இருக்கின்றது. ஆனால் வெற்றி இல்லை. தாய் இப்போது துப்பாக்கிச் சிப்பாயாகவே மாறுகின்றாள்; போராட்டத்தை அடக்க முயல்கின்றாள்; ஆயுதங்களைப் பயன் படுத்துகின்றாள்; கையால் அடிக்கின்றாள்; அதற்கும் அடங்காதபோது முன்னேற்றமான முறையில் கண்டு பிடிக்கப்பட்ட பிரம்பைப் பயன்படுத்துகின்றாள்.

இதுதான் எளிய குடும்பத்தில் சிறுவர்கள் வளரும் நிலைமை. செல்வமான குடும்பத்திலும் இந்த நிலைமை உள்ளது. ஆனால் அதன் நிறம் வேறு; வடிவு வேறு; அவ்வளவே அன்றிப் பொருள் ஒன்று. அங்குக் குழந்தைக்கும் பெற்றோர்க்கும் போர் நடக்கின்றது. ஒரு புதுப் பலகைக்குப் பதில்

இரண்டு மூன்று புதுப் பலகைகள் செல்வர் வீட்டில் நுழையும். ஆறுமாதத்திற்கு ஒரு பலகை உடைவதற்குப் பதில் ஆறு நாளைக்கு ஒரு பலகை உடையும். அதனால் அடிக்கடி புதுப் பலகைகள் காண்பதால், பலகைப்போர் நிகழ்வதில்லை. அண்ணனுக்குக் கிடைப்ப தெல்லாம் தம்பிக்கும் கிடைப்பதால், அவர்கள் இருவருக்குமிடையே போராட்டம் குறைகின்றது. ஆனால் தந்தையின் கையில் கண்ட கத்தியைக் குழந்தை கேட்கும்போது அவர் என்ன செய்கிறார்? மறுக்கவும் மனம் இல்லை, கொடுக்கவும் மனம் இல்லை. குழந்தையோ பிடிவாதம் செய்கிறான். அவர் அப்போது தம் தனியுடைமைக் கொள்கையை நிலை நாட்டுகின்றார். அல்லது ஏமாற்றுகின்றார். "ஊர்க்குப் போகலாம், பொம்மை வாங்கித் தருவேன், அண்ணன்தான் கெட்ட பையன், நீ நல்ல கண்ணு" என்றெல்லாம் வாக்குறுதிகள் கொடுத்தும் வாயாரப் புகழ்ந்தும் ஏமாற்றுகின்றார். இந்த முறையில் ஏமாந்த குழந்தை மற்றும் எத்தனை முறை ஏமாந்து நிற்பான்? தந்தை இல்லாத நேரத்தில் அவர் மேசை மேல் விட்டுச் சென்ற பேனாவை எடுத்து எழுதுகின்றான். பேனா முனையை நன்றாகப் பரீட்சை செய்து பார்த்து விடுகின்றான். அந்தப் பேனாவைத் தனித்தனியாகப் பகுத்து அறிய முடியுமா என்று ஆன வரையில் முயல்கின்றான். முடிந்த வரையில் பயன்படுத்திவிட்டுத் தனக்கு உரிமையான இடத்தில் பொம்மைகளோடும் மற்றப் பொருள்களோடும் சேர்த்து வைத்து விடுகின்றான்.

தந்தை பேனாவைத் தேடித் தேடி வெறுப்படைகின்றார். சினமும் கொள்கின்றார். மனைவியைப் பழிக்கின்றார். வேலைக்காரியை நீக்கிவிடு

கின்றார். ஆபீசில் தமக்குக் கீழ்ப் பட்டவர்களை எல்லாம் கடுமையாக நடத்துகின்றார். அன்று மாலையில் வீடு திரும்பும்போது பையன் கையில் பேனாவைப் பார்த்துவிட்டு அயர்ந்து நிற்கின்றார். "எப்படியடா எடுத்தாய்" என்று கேட்கின்றார். என்னிது—பேனா—குடுக்க மாட்டேன்—என்னிது" என்கின்றான் பையன். "நீ அப்பா அல்ல! பேனா கொடு, அப்பா!" என்று தந்தை கெஞ்சுகின்றார்: அதை எடுத்துக்கொண்டு ஓடிப்போய் ஒளித்து வைக்கின்றான் பையன். "பையன் கண்ணில் படாதபடி வைக்கக் கூடாதா? நாம் செய்கிற தப்பு. அவன் கைக்கு எட்டும்படி ஒரு பொருளைவிட லாமா?" என்று தாய் தன் கணவனுக்கு அறிவுரை கூறத் தொடங்குகின்றாள்.

குடும்பம் குழந்தைகளின் மனத்தை இப்படி மாற்றிவிட்டுப் பிறகு இடர்ப்பாடுகள் கண்டு கலங்கி வருந்துகின்றது.

தனியுடைமை எண்ணத்தைக் குழந்தைகள் மனத்தில் வளர்த்து விடுகிறோம். பிறகு குழந்தைகள் அந்த எண்ணங்கொண்டு வாழத் தொடங்கும் போது மாற்ற முயல்கின்றோம்; தோற்று விடுகின்றோம். தன்னலம் முன் வந்து அமைச்சுத் தொழில் ஆற்றுகின்றது. "அடக்கு முறை—இதை விடச் சிறந்த கருவி இல்லை. அதை ஓர் அறமாகச் செய்து விடு. நூல்கள் எழுது. அமைப்புக்கள் அமைத்திடு. அடக்கு முறையைப் போற்றிடு" என்று தன்னலம் சொல்லிக் கொடுக்கின்றது. "அடியாத பிள்ளை படியாது" என்று, உள் ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதவர்கள் சொல்லிச் செயலில் கடைப்பிடிக்கின்றார்கள். "குழந்தைகளை ஏமாற்றத் திறமைவேண்டும். அறி

வாகச் சொல்லி மாற்றிவிடவேண்டும்" என்று உள்ளத்தை விற்று விட்டு மூளையை மட்டும் வளர்க்கின்றவர்கள் தந்திரம் கையாள்கின்றார்கள். ஆனால் இவ்வளவு முயற்சி நடந்தும், போராட்டம் நிற்கவில்லை. எல்லாக் குழந்தைகளும் போராடுகின்றன; வெவ்வேறு வகையாகப் போராடுகின்றன. கற்ற தனியுடைமையை வாழ்க்கையில் காணவே போராடுகின்றன.

குழந்தை வளர்கின்றது. அண்ணன் கையில் உள்ள புத்தகத்தைப் பெற விரும்புகின்றது. கேட்டால் கிடைக்காது, இல்லாதபோது எடுத்துவைத்தாலும் நிற்காது, அழுதாலும் வராது, அம்மாவிடம் பிடிவாதம் செய்தாலும் பலிக்காது என்று அனுபவத்தால் உணர்ந்து கொண்ட குழந்தைக்குத் துணிச்சல் மிகுதியாகின்றது. அண்ணன் கையில் உள்ள புத்தகத்தைக் கண்டதும் நேரே கைநீட்டிப் பறித்தது; அண்ணன் தன் வலிய கையால் தடுத்தபோது இயன்ற வரையில் கைக்கு எட்டிய அட்டைப் பகுதியை உறுதியாக இழுத்தது. அட்டையும் இரண்டு ஏடும் சேர்ந்து கிழிந்தன. தாய் வந்தாள். பெரியவன் சினத்தையும் சின்னவன் அழுகையையும் கண்டாள்.

இது குடும்பம்; சிறு உலகம்; பெற்றோரால் ஆளப்படும் அரசாங்கம். இதே நிலைமை நாட்டிலும் உள்ளது. நாட்டிலும் அரசாங்கம் எவராலோ அமைக்கப் படுகின்றது. அவர்களும் மனிதர்களே. அவர்களுடைய தன்னலத்திற்கு இடையூறு இல்லாதவரையில், "நாம் எல்லாரும் ஒரு குடும்பம்; நமக்குள் வேறுபாடு இல்லை; எல்லாரும் ஆண்டவனுடைய மக்கள்" என்று சமயப் பிரசங்கம் செய்கின்றார்கள். தன்னலத்திற்கு இடையூறு நேர்ந்த

போது பீரங்கிப் பிரயோகம் செய்கின்றார்கள். அன்போடு கொஞ்சிய அந்தத் தாயே குழந்தைகளைப் "பொல்லாத பிள்ளைகள்" என்று வெறுத்து நோவது போல், அரசாங்கமும், "தொழிலாளிகள் பொல்லாத மக்கள்; ஏழை மக்கள் எல்லாரும் முரடர்கள், போக்கிரிகள்" என்று குறை கூறுகின்றது. அன்னம் ஊட்டிய கையால் அன்னை அடிப்பது போலவே, பள்ளிக்கூடங்களும் பிறவும் அமைத்த அரசாங்கமே, படை திரட்டிக் குண்டு மழை பொழிந்து அமைதியை நிலை நாட்ட முயல்கின்றது.

பெற்றோர் உலகம் வேறு; பள்ளிக்கூடச் சிறுவர் உலகம் வேறு; பொம்மை விளையாட்டுக் குழந்தைகள் உலகம் வேறு. மூன்று தனித் தனியுலகங்களை ஓர் உலகமாக்கி ஒற்றுமை காண முயல்கின்றோம். குழந்தையின் கையில் புத்தகமும் பேனாவும் கொடுப்பது பயனற்ற செயல்தான்; கத்தியைக் கொடுப்பது குற்றமான செயல்தான். ஆனால் அந்தத் தாய் கூறியதுபோல், குழந்தையின் மனத்தில் இந்தக் கொடிய தனியுடைமை வேற்றுமை வளர்க்காதவாறு செய்யலாமல்லவா?

உழைப்பாளிகளும், உண்டுகளித்திருப்போரும் வேறு வேறு உலகத்தைச் சார்ந்தவர்களா? அப்படியானால் அவர்களுக்கு வேறு வேறு நாடுகளும் ஊர்களும் அமைத்திட வேண்டும். ஓர் ஊரில் இருவகைச் சாதியாரும் இருக்க இடங் கொடுப்பது கொடுமையே யாகும். தனித்தனி நாடே பிரித்து அமைத்திடலாம். ஆனால், உழைப்பாளிகள் தனியே பிரிந்து நாடு அமைத்து வாழவும் முடியும்; செழித்து முன்னேறவும் முடியும். ஆனால், உண்டு களித்திருப்போர் கதி என்ன? அவர்களுக்கு வீடு கட்டுவோர் யார்? உணவுப்பொருள் பயிரிடு

வோர் யார்? உடை முதலியன செய்து உதவுவோர் யார்? சிறுவேலை முதல் பெருங்கடமை வரையில் அவர்களுக்காக, அவர்கள் பெயரால் செய்து அவர்களை வாழவைப்பவர் யார்? அவர்களுடைய நாட்டிலும் உழைப்பாளிகள் குடியேறவேண்டுமா?

தனித்தனி உலகங்களாக உள்ளவற்றை ஒன்று சேர்த்துக் குடும்பம் என்று குழப்பித் தொல்லை விளைத்துத் திகைக்கின்ருேம். ஆனல், உண்மையாகவே ஒன்றுபடுவதற்குரிய மக்களினத்தை இருவேறுவகையாகப் பிரித்து ஒருவகையாரை உழைக்கச்செய்து அடக்கி, இன்னெரு வகையாரை சிறுபான்மையாரை உண்டுகளித்திருக்கச் செய்கின்ருேம்—போராட்டம்!

## இரண்டாவது வெளியீட்டில்

●

1. "கம்பன் கண்ட தமிழகம்"

↓

2. "தமிழருக்கும் சுயநிர்ணயம்"

—ம. பொ. சி.

# தமிழகத்தில் தமிழரசு!

ம. பொ. சிவஞான கிராமணியார்.

பண்டை நாளில், தமிழகத்தில் தமிழரசே நிலவியது. நமது தமிழ் மன்னர்கள் வேறு எவர்க்கும் கப்பம் செலுத்திக் கைகட்டி வாழ்ந்தறியார். அவர்கள் வேறெந்தச் சாம்ராஜ்யத்திற்கும் கட்டுப்படாது தனியரசு புரிந்தனர். அந்தத் தனியரசில் தமிழ் தழைத்தது. தமிழர் அறிவு, ஆற்றல், ஆண்மை, நாகரிகம் ஆகியவற்றில் உலக மக்கள் யாவரினும் மேம்பட்டு வாழ்ந்தனர்.

அரசர்களின் ஆதரவில் சங்கம் அமைத்து தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்டனர் அக்காலப் புலவர்கள். மொழிவளர்ச்சிக்கென்றே அரசர்களின் ஆதரவில் சங்கம் அமைத்து நடத்தியது தமிழகத்தைத் தவிர வேறு நாடுகளில் இல்லையென்பது திண்ணம்.

பழந்தமிழரது அரசியல் நெறிக்கு ஈடாக இன்றளவும் உலக நாடுகள் எங்கணும் நாம் கண்டதில்லை. அக்கால மன்னர்கள் குடிகளின் காட்சிக்கெளியர்; கடுஞ்சொல்லரல்லர். குடிமக்கள் செவிகைப்பச் சொல்லும் சுடுசொல்லையும் பொறுத்து நீதி வழங்கும் பண்புடை வேந்தராகப் பாராண்டனர். பகைவனின் படைக்கஞ்சார். ஆனால், "இறைகொடியன்" என்று குடிகள் சொல்லும் இன்னச் சொல்லுக்கு அஞ்சுவர். குடிமக்கள் "அல்லற்பட்டு ஆற்ருது அழும் கண்ணீரே" தங்கள் "செல்வத்தைத் தேய்க்கும் படை" என்று

பயந்து அந்நிலை ஏற்படாதவாறு செங்கோல் செலுத்தினர். [குடிதழுவிக் கோலோச்சும் ஜனநாயக ஆட்சி நடத்தியவர் தமிழ் மன்னர். "மன்னுயிரெல்லாம் மண்ணாள் வேந்தன் தன்னுயிர்" என்ற அரசாளும் நீதி வகுத்தவர் தமிழர்.

அன்றைத் தமிழரின் பொருளாதாரக் கொள்கை இன்றைய உலகமும் ஏற்கும் தன்மை வாய்ந்தது. இயற்கை அன்னை தரும் பொருள்களை எல்லோரும்,

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

என்று எண்ணியவர் தமிழர். வளத்துடன் வாழும் தனி உடைமையாளர் இல்லாத நாட்டில்தான் வறுமையால் வாடும் ஏழை மக்கள் இருக்கமாட்டார்கள் என்ற வர்க்க வேற்றுமைத் தத்துவத்தை முதல் முதல் அறிவித்தவர் கவியரசர் கம்பராவார். சுருங்கக்கூறின், "கொள்வோரும் கொடுப்போரும் இல்லாமல் எல்லோரும் உழைத்துண்ண வேண்டும்" என்பதே தமிழன் கண்ட பொருளாதாரக் கனவு.

தமிழர் அரசில் தனித்திருந்தாலும் அன்பில் உலக மக்களோடு பிணைந்தே வாழ்ந்தனர். தமிழகத்தை உலகத்தின் ஒரு பகுதியாகவும் தமிழினத்தை மக்கள் சமுதாயத்தின் ஒரு பிரிவினராகவுமே எண்ணி இன்புற்றனர். தமிழகத்தின் கடற்கரைப் பட்டினங்களில் சீனர், யவனர், பாபிலோனியர், எகிப்தியர், ரோமர் ஆகிய பிறநாட்டாரெல்லாம் குடியேறி வாணிபம் செய்து வளமுற வாழ்ந்ததை சங்க நூல்கள் அறிவிக்கும். "யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்பதே தமிழரின் சர்வதேசீயக் கொள்கை என்றால் மிகையன்று.

## 17. தமிழகத்தில் தமிழரசு!

தமிழரின் சமயக்கொள்கையும் அவர்தம் சர்வ தேசீயக் கொள்கைக்கு முரண்பட்டதன்று. சாதிக்கோர் நீதி கூறும் சழக்கர் தன்மையும், ஆளுக்கொரு ஆண்டவனைக் காட்டும் அறிவற்ற செய்கையும் தமிழருக்குப் புறம்பானது. "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற சமரச நெறியே தமிழரின் சமய நெறி. மனிதரிலே ஒருவரை உயர்ந்தோராகக் கொண்டு புகழ்வதும் இன்னொருவரைத் தாழ்ந்தோராகக் கொண்டு இகழ்வதும் அறிவுடைமை யாகாதென்பதைத் தமிழன் அன்றே உணர்ந்திருந்தான்.

பழந்தமிழரசில் பெண்ணடிமை இல்லை. பெண்ணுக்கு உயர்வு தந்தவன் தமிழன் பெண்ணை வற்புறுத்திக் கட்டிக்கொடுக்கும் வழக்கம் தமிழருக்குக் கிடையாது. பழந்தமிழகத்தில் காதல் வாழ்க்கை களிநடம் புரிந்ததை அகநானூறு அறிவிக்கும்.

பண்டை நாளில் பெண்மக்கள் ஆண்களோடு சகல துறைகளிலும் சரிநிகர் சமானமாக வாழ்ந்தனர். ஆண்களைப் போலவே பெண்களுக்கும் கல்வியும் செல்வமும் உண்டு. புவியரசரும் தலை வணங்கும் புலமை பெற்றவள் ஔவை. மற்றும் காக்கைப்பாடினி, நச்செள்ளையார் போன்ற பெண் மணிகள் சங்கப் புலவர்களாகத் திகழ்ந்தனர்.

வீரத்திலும் பெண்கள் ஆண்களுக்கு விலக்கல்ல. மாற்றான் பறையோசை கேட்டு, பாலொழுகும் மகனை வேலொழுகும் போர்க்களத்திற்கு அனுப்பினாள் ஒரு வீரத் தமிழ்த் தாய். தன் மகன் புறமுதுகிட்டோடியதால் முதுகில் அம்புபட்டு மாண்டான் என்ற செய்திகேட்டு, "இதோ போர்க்களம்

சென்று உண்மையறிவேன். செய்தி உண்மை யாயின் அந்தப் பேடி மகனுக்குப் பால் கொடுத்த என் ஸ்தனத்தை அறுத்தெறிவேன்" என்று கூறி போர்க்களம் புகுந்து அங்கு மகன் மார்பில் அம்பு பாய்ந்து மாண்டு கிடந்ததை அறிந்து அவனைப் பெற்றபோதிலும் பெரிதுவந்தாள் மற்றொரு வீரத்தாய்.

அரச நீதி பிழைத்த பாண்டியன் முன்னின்று வாதப்போர் செய்து அவனது ஆவியையும், அரசையும், மதுரையையும் அழித்து அரசியல் புரட்சி விளைத்தாள் சோழநாட்டுக் கண்ணகி.

இவ்வாறு பழந்தமிழரசில் பெண்கள் அறிவு, ஆற்றல், வீரம் ஆகியவற்றில் உயர்ந்து இருந்ததை உன்னுந்தோறும் நமது உள்ளம் பூரிக்கிறது. நம்மைப் பெற்றெடுத்த தாய்க்குலத்தின் பெருமைக்குத் தலை வணங்குகிறோம்.

பழந்தமிழரசில் தமிழ்க்கலைகள் அரசர் மேற்பார்வையில் தழைத்து வளர்ந்தன. இசைக்கலைக்குத் தமிழர் தந்த பெருமைக்கு ஈடாக வேறெதையும் சொல்லமுடியாது. உழவும் தொழிலும் எங்கெங்கு உண்டோ அங்கெல்லாம் இசைத்தமிழ் தாண்டவமாடியது. உழைப்பில் உறுதியும் உற்சாகமும் கொண்டு அதன் விளைவாக உற்பத்தியைப் பெருக்க இசையைப் பயன்படுத்தினர் பண்டைத் தமிழர். பயிர்த்தொழிலில் ஈடுபட்டோர் அத்தொழிலின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு விதமான பாடல்கள் பாடினர். உழவுப்பாட்டு, ஏற்றப் பாட்டு, நடவுப் பாட்டு இப்படித் தொழிலும் இசையும் இணைந்து வாழ்ந்தன.

பெண்கள் இசை முழக்கமோ பேசுந்தரமன்று. அம்மானைப் பாட்டு, வரிப் பாட்டு, ஊஞ்சல்

பாட்டு என்று இளம்பெண்களின் இன்ப வாழ்க்கைக்குரிய பாடல்கள் பலப்பல. பிள்ளை உறங்கத் தாலாட்டுப் பாட்டு, அன்னம் ஊட்ட அம்புலிப் பாட்டு போன்ற தாய்மைப் பருவத்தில் பாடும் பாடல்களும் எத்தனை? இவ்வாறு பெண்கள் தம் கன்னிப் பருவத்தில் இன்ப எழுச்சிக்கும், தாய்மைப் பருவத்தில் பிள்ளை வளர்ச்சிக்கும், இசையையே துணையாகக் கொண்டு வாழ்ந்தனர்.

சிற்பம், சித்திரம் ஆகிய கலைகளில் தமிழர்க்கு இணை தமிழரேதான். தமிழரது சிற்பக்கலையையும் சித்திரக்கலையையும் ஆலயங்கள்தோறும் குகைகள் தோறும் இன்றளவும் அழகுறக் காணலாம்.

வாணிபத்தில் சிறந்திருந்தது பண்டைத் தமிழகம். வாய்மையையே குறிக்கோளாகக் கொண்டு பொருளீட்டினர் நம் தமிழ் வணிகர்.

நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவும் ஒப்பநாடிக்
கொள்வதூஉ மிகைகொளாது
கொடுப்பதூஉங் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்து வீசும்

அறவுள்ளம் படைத்த தமிழ் மரபில் இன்று கரவுள்ளம் படைத்த கள்ளமார்க்கெட்காரர்களே அதிகமாயினர்.

தமிழரது மரக்கலங்கள், தமிழ் நாட்டுப் பொருள்களில் தமிழர் அநுபவித்ததுபோக எஞ்சியதைப் பிற நாடுகளுக்கு ஏற்றிச் சென்றன. தமிழருக்குத் தேவையான பிறநாட்டுப் பொருள்கள் தமிழ் நாட்டின் துறைமுகங்களில் போரேரி நின்றன. திரைகடலோடியும் திரவியம் தேடிக்

தமிழ் நாட்டின் செல்வத்தைப் பெருக்கினர் தமிழ் வணிகர்.

## இன்றைய தமிழகம்

மேற்சொன்னவெல்லாம், பண்டைத் தமிழரசில் தமிழர்வாழ்ந்த வரலாராகும். ஆனல், இன்றைய தமிழகத்தின் நிலையென்ன? அதை நினைக்குந் தோறும் மானமுள்ள எந்தத் தமிழன்தான் மனம் வருந்தாமலிருக்க முடியும்? அகில உலகிலும் ஆணை செலுத்தி அரசுபுரிந்த தமிழினம் இன்று ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டு அவர்தம் அதட்டல் உருட்டல்களுக்கு அஞ்சி வாழ்கின்றது.

பழியெனின் உலகொடுவரினும் கொள்ளாது புகழெனின் உயிரையும் கொடுக்கும் பழந்தமிழ் மரபு, இன்று கேவலம் பட்டம் பதவிகளில் மோகம் கொண்டு அதிகாரப் பதவியில் அமர்ந்திருப்போரின் அறிவற்ற ஆணைகளுக்கு அடங்கி வாழ்கின்றது.

தமிழ் மொழியின் நிலையென்ன? அரியாசனமேறி அரசுபுரிந்த நம் தமிழ்மொழி, ஆங்கில மொழியால் அடக்கப்பட்டு வளங்குன்றி, வாழ் விழந்து கிடக்கின்றது. ஆங்கில மோகத்தால் தாய் மொழியை மறந்தனர் தன்மானமற்றத் தமிழர்களில் சிலர். அரசாளும் மொழியாலேற்பட்ட அநீதி இது. இனி தேசீய எழுச்சியாலும், தமிழ் மொழிக்குச் சிறிதளவு பாதகம் ஏற்பட்டிருப்பதை வருத்தத்துடன் சொல்லித்தான் தீரவேண்டும். புரியாத மொழியில் கோஷங்கள்செய்து பூரிப்படையும் மக்களை என்னென்று சொல்லுவது! தமிழன் என்ற இன உணர்ச்சியும், தமிழ் மொழியில் பற்றுதலும் இல்லாத தேசீய உணர்ச்

சியே இதற்குக் காரணம். 'இனப்பற்று மொழிப் பற்று இல்லாத தேசீயம் தேசீயமாகுமா?

இன்றைய அரசியல் உலகைச் சற்று ஆராய்வோம். சரித்திரம் காணுத காலந்தொட்டு அரசாண்டு அநுபவம் பெற்றவர் தமிழினத்தார். அத்தகைய தமிழ் மரபில் ஆங்கிலேய கவர்னரின் கீழ் நடக்கும் அரசில் அமைச்சர் பதவிக்குக்கூட ஆள்பஞ்சம் ஏற்பட்டுவிட்டதாகக் கூறுவதைக் கேட்டு எவர் நெஞ்சந்தான் புண்படாதிருக்க முடியும்.

உலகம் இன்புறக் கண்டுதாம் இன்புற்ற தமிழர் இன்று தம்தம் வாழ்வே பெரிதெனக் கொண்டு தனிவுடைமைத் தீமைக்கு ஆளாகி நிற்கின்றனர். "தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சிதம் மெய் வருத்தக் கூலிதரும்" என்ற தன்னம்பிக்கை கொண்ட தமிழினம் தனிவுடைமையாளரும், அவருடன் சேர்ந்து சதிசெய்த சமயக் கூட்டத்தாரும் கற்பித்த 'தலைவிதி' தத்துவத்தையேற்று முயற்சி மறந்து துன்பப்படுகிறது. "ஊழையும் உப்பக்கம் காண்போம்" என்ற வள்ளுவரின் உபதேசத்தை மறந்து வஞ்சகர் சொன்ன 'தலைவிதி' தத்துவத்தையா தமிழர் ஏற்பது?

இனி, வாணிபத்துறையில் தமிழரின் தற்கால நிலையைக் கவனிப்போம். ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டதின் விளைவாக தமிழ் நாடு மட்டுமின்றி இந்தியாவிலுள்ள நாடுகள் யாவுமே வாணிபத் துறையில் வலிமை யிழந்தன. ஆயினும் கடந்த அறுபது ஆண்டுகளாக நாம் நடத்திய சுதந்திரப்போரின் விளைவாக சகல துறைகளிலும் இழந்த அதிகாரத்தை ஓரளவேனும் பெற்று விட்டோம் என்பதில் ஐயமில்லை. ஆனல் ஏகாதிபத்தி

யத்தினிடமிருந்து இந்தியா அடைந்துள்ள வர்த்தக உரிமையில் தமிழர்கள் தமக்குரிய பங்கைப்பெற முடிந்ததா? இல்லையென்றே சொல்ல வேண்டும். வர்த்தகத் துறையில் ஆங்கிலேயரிடமிருந்து பெற்ற உரிமைகள் அனைத்தும் பம்பாய் துறைமுகத்தோடு நின்றுவிட்டன!

தமிழர்க்கே உரியதாயிருந்தது கடல் தாவு கலை. ஆங்கிலேய அதிகாரத்தார் அதைப் பறித்து நம்மைப் பாழ்படுத்தினர். "இழந்த அதிகாரத்தைப் பெற்றே தீருவேன்" என்று வீறுகொண்டெழுந்து சுதேசிக் கப்பல் கம்பெனியைத் தோற்றுவித்தார் தேசபக்தர் வ. உ. சிதம்பரம் பிள்ளை. ஆங்கிலேய வர்த்தகக் கூட்டத்தார் அடக்குறை கொண்டு அவரை அழிக்க முயன்றனர். முன் ஜென்ம பாபத்தைக் கழிக்க மற்றோர் ஜென்மம் வாய்க்கும் என்பர் சமயவாதிகள். ஆனல், இந்த ஜென்மத்தில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த பாபத்திற்காக இரு ஜென்ம தண்டனை யடைந்தார் சிதம்பரம் பிள்ளை. கப்பற்றொழிலை ஆங்கிலேயரிடமிருந்துகைப்பற்ற அன்று போராடி துன்பமுற்றவர் தமிழர். அன்று சிதம்பரனர் போராடிய நாளில் உறங்கிக் கிடந்த வால்சந்த் ஹீராசந்துக்கள் இப்போது கப்பற்றொழிலில் பணத்தை வாரிக் குவிக்கின்றனர். வாணிபத் துறையில் உரிமைபெற தமிழர் செய்த தியாகத்திற்கும் அவர்கள் அடைந்த ஏமாற்றத்திற்கும் இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்.

கலை உலகில் சென்ருல் தமிழரின் கண்மூடித்தனம் கவலையைத் தருகிறது. கலை உணர்வில் தமிழருக்கு ஒப்பானவர் இவ்வுலகத்திலில்லை என்ருல் மிகையாகாது. அந்த உயர்கலை—உயிர்க்கலை இன்று என்னகதி அடைந்திருக்கிறதென்று பார்ப்

போம். கலை வளர்ச்சிக்காக கடவுள் தத்துவத்தைக் கலை வடிவில் காட்டினர் ஆன்றோர். ஆனால் நாளடைவில், அந்தக் கடவுள் உணர்ச்சியானது கலை உணர்ச்சியைக் கொன்றுவிட்டது. அறிவைத் தெய்வமாக வணங்கிய தமிழகத்தில் அறிவாளிகளின் தொகை நாளுக்குநாள் அருகி வருகிறது.

இயல், இசை, நாடகமென்ற அறிவை வளர்க்கும் முத்தமிழ்க் கலையை வளர்ப்பதற்கு முதலிடமாகத் திகழ்ந்த ஆலயங்கள் இன்று அறியாமையைக் காக்கும் அரணாகப் பயன்படுகின்றன. இனி பக்தர்களைப் பற்றிய கதைகளைப் பார்த்தாலோ பயங்கரத்தைத் தருகின்றன. அருமைக் குழந்தையைத் தாய் கால் பிடிக்க தந்தை கழுத்தறுத்து கறி சமைத்துப் படைப்பதுதான் அன்புவடிவான ஆண்டவனுக்குத் திருப்தியாம்; இந்தக் கொலை வழி தமிழர் கலை வழியாகுமா?

அம்மி மிதித்து அருந்ததி காட்டி அக்கினி சாட்சியாக காப்பாற்றும் கடமையை மேற்கொண்ட கணவன் தனது மனைவியைப் பக்தருக்குப் பரிந்தளித்த பகுத்தறிவற்ற கதை தமிழரின் நாகரிகமாகுமா?

இசைக்கலையை யெடுப்போம். தமிழகத்தில் இசை தொழிலோடு இணைந்து வாழ்ந்ததை மேலே சொன்னோம். இசையானது அன்று மக்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டியது. பின்னாளில், இசைக் கலை அத்துறையிலிருந்து விடுபட்டு வானுலகிற்கு வழிகாட்டும் வேலையை மேற்கொண்டது. இன்று அதுவும்மாறி ஒரு சிலரின் பணப்பையை நிரப்புவதற்காக இசை பயன்படுகிறதே தவிர கேட்போரின் உள்ளத்தில், உரிமையில் பற்றும், கடமை

யில் உணர்ச்சியும் எழுப்புகிறதா வென்றால் இல்லை யென்றே துணிந்துகூறலாம். நாடகக் கலையைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. ஒழுக்கத்தை உயிராகக் கருதியவன் தமிழன். ஆனால் நாடக உலகில் சிறிய பாத்திரங்கள் முதல் பெரிய நட்சத்திர நடிகர்கள் வரையில் மிகப் பெரும்பாலோரின் ஒழுக்கத்தைப்பற்றி உலகோர் அறிவர். நடிகர்களின் கதி இவ்வாறிருக்க இவர்கள் நடிக்கும் கதையைப் பற்றி கேட்கவேவேண்டியதில்லை. சுருங்கக்கூறின், இன்றைய நாடகமேடையில் தமிழ் மொழியில்நாடகங்கள் நடக்கின்றன என்றாலும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் அவற்றிற்கும் சம்பந்தமேயில்லை. மனிதர் பின்பற்றக்கூடாத ஒழுங்கீனமும், பின்பற்ற முடியாததும் அறிவுக்குப் பொருந்தாததுமான அருட் செயல்களும் தவிற பின்பற்றுதற்குரிய அம்சங்கள் ஏதேனுமிருக்கின்றனவா என்பது சந்தேகமே.

இயற்றமிழ்த் துறையில் நவநவ எழுத்தாளர்கள் நாளுக்குநாள் பெருகி வருகின்றனர். புதுமலர்ச்சி, மறுமலர்ச்சி, எழுத்தாளர்கள் என்றெல்லாம் போற்றப் படுகின்றனர். ஏதோ, புரியாத வகையில் புத்தகங்கள் வெளிவந்த காலம் போய் புரியக்கூடிய முறையில் எழுதும் இந்தப்புதுமலர்ச்சி எழுத்தாளர்களைப் பாராட்ட வேண்டியதுதான். ஆனால், வெறும் எழுத்தில் மட்டும் புதுமலர்ச்சி தோன்றினால் போதுமா? எண்ணத்திலும் இருக்க வேண்டாமா? தற்காலம் வெளிவரும் தமிழ் வசன நடை நூல்களில் பெரும்பாலானவை வெறும் பொழுதுபோக்குக்காகப் படிக்கும் தன்மையதே ஒழிய வாழ்க்கையில் புத்துணர்ச்சி யூட்டக்கூடிய நூல்கள் மிகச்சிலவே யாகும். சரித்திர நூல்களோ ஒவ்வொருவனில் வீரத்திற்குச் சிவாஜியையும், தேசபக்

திக்கு ஜான்ஸி ராணியையும், அன்புக்கு அசோகரையும் மட்டும் எடுத்துக் காட்டாகக் கூறுகின்றனவே யொழிய, செங்குட்டுவன் தீரத்தையும், கண்ணகியின் புரட்சியையும், கம்பனின் சமதர்மத்தையும் அவை நமக்குக் கற்றுத் கருவதில்லை. இந்தச் சரித்திர ஆசிரியர்கள்,

சோழன் தம்பி சிலம்பை யிசைத்ததும்
தெய்வ வள்ளுவன் வான்மறை கண்டதும்
பாரில் நல்லிசைப் பாண்டிய சோழர்கள்
பாரளித்ததும் தர்மம் வளர்த்ததும்
முன்னர்நாடு திகழ்ந்த பெருமையும்.........

அன்னயாவும் அறியார்களோ அல்லது அறிந்தே மறந்தார்களோ ஒன்றும் சொல்வதற்கில்லை. இலக்கண இலக்கியங்களில் வல்லுனராய்த் திகழும் தமிழ்ப் பண்டிதர்கள், தமிழுக்காக சேவை செய்கிறார்கள் என்பது நமக்கு ஓரளவு மகிழ்ச்சியைத் தருகிறது. என்றாலும், இவர்களது போக்கு காலத்தோடு ஒட்டியதாயில்லாமலிருப்பதுவருந்தத்தக்கது.

திருவள்ளுவரின் அறத்துப்பாலுக்கு வியாக்கியானம் கூறி வெளிவந்த நூல்கள் எண்ணிலடங்காதன. இவை வேண்டியதே, என்றாலும் அரசியல் நெறியையும், ஆண்மைக் குணத்தையும் பொருளாதாரப் புதுவழியையும் புகட்டக்கூடிய பொருட்பாலை ஆராய்ந்து தற்காலத்திற்குப் பொருந்தக்கூடிய வகையில் வெளிவந்த புத்துரைகள் ஏதேனும் உண்டா? இல்லையென்றே சொல்லலாம்.

திருக்குறள் மட்டுமன்றி பழைய தமிழ் இலக்கியங்கள் அத்தனையும் நம்முடைய அரசியல், பொருளாதாரப் போராட்டங்களுக்கு மிகவும் பயன் படக்கூடியனவே என்பதில் சந்தேகமில்லை

ஆனல் அப்படி பயன்படாமலிருப்பதற்குக் காரணம் இன்றைய அரசியல் தலைவர்களுக்கு இலக்கிய ஞானமும், பண்டிதர்களுக்கு அரசியல் உணர்ச்சியும் இல்லாததே காரணமாகும். இனியேனும் இந்நிலை மாறவேண்டுமானல் தமிழும் அரசியலும் ஒன்றுபட்டே தீரவேண்டும்.

பெண்களின் நிலையைப் பேசுவோம். அல்லி பிறந்து அரசாண்ட நாடு என்கிறேம். ஆனல் இன்றைய தமிழகத்தில் அரசியலாரின் கோட்டைக்குள் புகுந்து அரசாட்சி செய்யும் தமிழ்ப் பெண்கள் எத்தனை பேர்? பண்டைய மறவர் குலத்து வீர மகளிரைப் போன்று இன்றைய சுதந்திரப் போரில் தலைமை தாங்கும் தமிழ் மகளுண்டா? இந்த நிலை ஏற்படக்காரணமென்ன? தமிழ்ப்பெண்களின் பிற்போக்குக் குணமா, வீரமற்ற தன்மையா இல்லவேயில்லை. எண்ணற்ற பெண்மணிகள் சுதந்திரப் போரிலீடுபட்டு அளவற்ற தியாகங்கள் செய்துள்ளனர். ஆனல் அவர்கள் முன்னுக்குவர சந்தர்ப்பம் தரப்படவில்லை. சமீபத்திலேகூட சென்னை சட்டசபைத் தேர்தலில் அதிக ஸ்தானம் பெற நம் தமிழ்ப் பெண்கள் செய்த பெருங் கிளர்ச்சியை அறியாதார் யார்? ஆனல் அவர்கள் கிளர்ச்சி கேட்பாரற்றுப் போய்விட்டது. இன்றையத் தமிழ் நாட்டு அரசியலில் தமிழரெனப்படுவோர் தலைமை தாங்குகிறூர்கள் என்பது உண்மை தான். ஆனல் அவர்களுக்குத் தமிழ் மனம் இல்லை யெனத் தயங்காது கூறுவேன்.

தமிழ் நாட்டில் அன்று அரசியல் தலைமை தமிழ்ப் பண்பாடு அறிந்தவர்களிடமே இருந்தது. வ. உ. சிதம்பரம் பிள்ளை, வ. வே. சு. ஐயர், திரு. வி. கலியாணசுந்தரனர் ஆகிய தமிழறிஞர்கள்

தமிழ் நாட்டுத் தலைமையேற்று நடத்தினர். ஆனல் இன்றைய நிலைமையை அப்படிச் சொல்வதற் கில்லை. இனப்பற்றும் மொழிப்பற்றும், உடை யோர் இன்றைய தேசிய வாதிகளில் எத்தனைபேர் இருக்கின்றனர் என்பதை எண்ணிப் பாருங்கள். தமிழ் மொழியின் வளமும் தமிழ் நாட்டின் வரலா றும் தமிழினத்தின் மேன்மையும் அறியாதவர் தமிழ் நாட்டின் அரசியலில் தலைமைதாங்கும் நிலை மையில் தமிழ் வளரவில்லையென்ருல், தமிழ் நாட் டின் எல்லை பறிபோகுமானல், தமிழ் நாட்டிலேயே தமிழினத்தவரைப் பிற இனத்தார் அடக்கிவைப் பார்களானல் அதில் ஆச்சரியம் என்ன இருக் கிறது.

“வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ் கூறும் நல்லுலகம்” என்ருர் பனம்பாரனர். “நீலத் திரைகடல் ஓரத்திலே நின்று நித்தம் தவம் செய்த குமாரி எல்லை வட மாலவன்குன்றம் இவற் றிடையே புகழ் மண்டிக்கிடக்கும் தமிழ் நாடு” என்ருர் பாரதியார். ஆனல் இன்றைய தமிழ் நாடு, குமரி முதல் வட வேங்கடம் வரை நிலவியிருக் கிறதா? இல்லையென்பதைச் சொல்லத் தேவை யில்லை. அன்று சேர நாடாகத் திகழ்ந்த தமிழகத் தின் ஒரு பகுதி இன்று கேரள நாடாக மாறிவிட் டது. தமிழ் மொழியில் பிறமொழி கலந்ததும் தமிழகத்தில் பிற நாகரீகம் படை எடுத்ததுமே இதற்குக் காரணமாகும். இது நிற்க, ஆங்கிலேயர் வகுத்த மாகாணப் பிரிவால் தமிழ் நாட்டின் எல்லை யில் சில பகுதிகள் ஆந்திரர்களுக்கு உரியதாயிற்று. எஞ்சிநின்ற பிரதேசத்திலும் “சென்னை எங்க ளுடையது” என்கின்றனர் ஆந்திரச் சகோதரர்கள். “முற்றும் இல்லையானலும், பாதியையேனும்

பறித்தே தீருவோம்!" என்றும் முழங்குகின்றனர். இதற்குத் தமிழரது தேசியப் போக்கும் 'தாராளத் தன்மை'யும் துணைபுரிகிறது. இவ்வாறு தமிழ் நாடானது பிறமொழிகளால் பிரிக்கப்பட்டும், அந்நியர் ஆட்சியால் வெட்டப்பட்டும், ஆந்திரர்களால் அபகரிக்கப்பட்டும் (?) குறுகிக் குறுகி வந்த பின்னரும்கூட நம் தமிழ் நாடானது இன்றும் வேறு எவர் தயவுமின்றி தனியரசு நடத்தக் கூடிய அளவுக்கு நிலப்பரப்பும் மக்கட்தொகையும் பொருள்வளமும் நிறைந்திருப்பது மகிழத்தக்கது.

## தமிழகத்தில் தமிழரசு !

இனியேனும் தமிழர் இன்றைய சீர்கெட்ட நிலையிலிருந்து மாறி சிறப்படைய வேண்டுமானல், வருங்கால சுதந்தர இந்தியாவில் சுதந்திரத் தமிழரசு அமைந்தே தீரவேண்டும். வெறும் மாகாண சுயாட்சிமட்டும் போதாது. தமிழ் வளர, தமிழர் வாழ, தமிழ் நாடு செழிக்க தமிழரசு வேண்டும். அத்தகைய சுதந்தர அரசியலை நிர்ணயிக்கும் உரிமை தமிழருக்கு உண்டு.

மேற்சொன்ன சுயநிர்ணய உரிமை இந்யாவிலுள்ள சகல தேசீய இனங்களுக்கும் உண்டு என்பதே நமது கொள்கை. இந்த கொள்கை சமரச முறையில் ஒப்புக்கொள்ளப்பட்டு அமுலுக்கு வருமானல் தமிழன் ஒரு புதிய தமிழகத்தைக் காண்பான். பழைய தமிழரின் பண்பாடும் இன்றைய புதிய உலகத்தின் புத்துணர்ச்சியும் கொண்ட புதிய தமிழினத்தைச் சமைப்பான். அந்தப் புதிய தமிழகத்தின் அமைப்பும், தமிழினத்தின் வாழ்வும், பின்வருமாறு இருக்குமென்று கனவு காண்கிறேன்.

## புதிய தமிழகம்

தமிழ் நாட்டைத் தாய் நாடாகவும் தமிழ் மொழியைத் தாய் மொழியாகவும் கொண்டு வாழும் தமிழ் நாட்டின் நிரந்தரக் குடிகள் அனைவரும் தமிழ ராகக் கொள்ளப்படுவர்.

தமிழர் எங்கெல்லாம் பெருவாரியாக வசிக் கிறார்களோ அந்தத் தொடர்ச்சியான பிரதேசங் கள் தமிழ் நாடாகக் கொள்ளப்படும்.

வயதுவந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள்கூடி தமிழகத்தில் சுதந்தரத் தமிழரசை அமைப்பர். அந்தப் புதிய தமிழரசு தனியரசுத் தத்துவத்தையே அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படும். என்றாலும் கடந்தகால சுதந்திரப் போராட்டத்தில் இந்திய தேசீய இனங் கள் அடைந்துள்ள ஒற்றுமையுணர்ச்சி, விஞ்ஞான வளர்ச்சி, சர்வதேச நிலை ஆகியவை காரணமாக தமிழரசு, தானே தனதிஷ்டத்தின்மீது ஏனைய இன அரசுகளடங்கிய இந்திய சமஷ்டியில் இணைய வேண்டும்.

அப்படி இணைவதானது பிற்காலத்தில் நன்மை பயக்காது தீமை பயப்பதாயின் பிரிந்து நிற்கும் உரிமையையும், தனது கலாச்சாரத்துடன் நெருங் கிய தொடர்புள்ள ஆந்திர, கேரள, கன்னட இன அரசுகளுடன் கூட்டுறவுகொண்டு ஒரு சிறிய சமஷ்டியை நிறுவிக்கொள்ளும் உரிமையையும் உடையதாயிருத்தல் வேண்டும்.

புதிய தமிழகத்தின் பொருளாதாரக் கொள்கை பொதுஉடமையேயன்றித் தனிவுடமை அல்ல. இந்தப் பொதுவுடமை லட்சியமானது தமிழரது பண்பாட்டின்படியும் தற்கால விஞ்ஞா

ரீதியாக வகுக்கப்பட்ட முறைகளின்படியும் நிறை வேற்றப்படும்.

புதிய தமிழகத்தில் சகல துறைகளிலும் தமிழ் மொழியே ஆட்சி செலுத்தும். ஆயினும் தமிழ் மொழிக்கு பாதகமற்ற முறையில் வேறு எந்த மொழியையும் யாரும் இஷ்டப்பட்டுக் கற்க உரிமை யுண்டு.

மதவிஷயங்களில் அரசாங்கம் பூரண நடு நிலைமை வகிக்கும்.

ஒடுக்கப்பட்ட மக்களை உயர்த்துவதிலேயே அரசாங்கம் தனது சக்தியை முதன்மையாகச் செலவழிக்கும். மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வு கற்பிக்கும் பழக்க வழக்கங்கள் சட்டப்படி தடுக்கப்படும். ஏற்றமும் இழிவும் இல்லாத சமத்துவ குணத்தை ஊட்டும் கல்வி முறையையே சர்க்கார் பின்பற்றும். சமயச் சார்பற்ற கலைகளை வளர்க்கும் பொறுப்பை அரசாங்கம் தானே மேற் கொள்ளும்.

மேற்சொன்ன வகையில் ஒரு புதிய தமிழ்கத்தைச் சிருஷ்டிக்கத் தமிழரசு ஒன்றினால்தான் முடியும். அத்தகைய அரசு **வேண்டுமென்று முரசு கொட்டுவோம்.**

---

# முடிவல்ல, தொடக்கம்

— குருசாமி —

மாலை வேளையின் முழு அழகும் குடிகொண்டிருக்கும் பூஞ்சோலை ஒன்றில், அழகிய ஒரு மலர் கீழே கிடந்தது. மனிதர்கள்—எத்தனையோ மனிதர்கள்—அவ்வழியே வருவதும் போவதுமாயிருந்தனர். வழியிலே கிடந்த, தரையை விளக்கம் செய்து கொண்டிருந்த அந்தப் பூவினை நோக்குவார் இல்லை; எடுத்து முகர்பவரும் காணோம். அழகுக்குக் குறைவில்லை; மலரின் முழு மலர்ச்சியிலும் எவ்விதக் குறைவுமில்லை. என்றாலும் அதை எடுப்பதற்கு எவரும் எண்ணவில்லை. எவர் கண்ணும் எவர் மனமும் அந்த அழகின் அவதாரத்தை, வீழ்ச்சியுற்ற மலர்த் திருவை நாடவில்லை.

மலர்கள் வேண்டுமென்றுதான் அத்தனை மக்களும் அங்கே கூடி வந்துள்ளனர். எனினும் இந்த மலரை ஏன் ஒருவரும் காணவில்லை....செடிகளிலும் கொடிகளிலும் மலர்ந்து சிரித்துக் காட்சியளிக்கும் பூக்களையே அவர்கள் நாடினர். இந்தப் பூவை மட்டும் அவர்கள் ஏன் புறக்கணிக்க வேண்டும்?

ஒரு சிறுவன் அந்த வழியே போனான். மலர்களைக் காணக் காண அவன் மனம் எக்களிப்புக் கொண்டது. பூவைச் சுற்றி வரும் வண்டுபோல் பூக்கள் இருந்த இடமெல்லாம் சுற்றிச் சுற்றி ஓடினான். மலர்களைப் பார்த்துக்கொண்டிருப்பதிலேயே அவனுக்கு எல்லையில்லாத மகிழ்ச்சி.

ஓடுகின்ற வேகத்திலே—அவனுடைய கைவீச்சின் மும்முரத்திலே—செடியிலிருந்து ஒரு பூ கீழே

விழுந்துவிட்டது. மலர் விழுகின்றபோது 'மௌன கீதம்' ஒன்று எழுந்தது; அந்த இசையைப் பையனுடைய கண்கள் 'கேட்டன'; திரும்பினான். விண்ணுலகில் சஞ்சரித்த அவன் மனம், பெரும் பளுவால் இழுக்கப்பட்டது. கனத்தைத் தாங்க முடியாமல் கீழே உட்கார்ந்துவிட்டான். மலரின் வாழ்வைக் குலைத்து விட்டதை அவனுடைய குழந்தை மனம் எப்படியோ உணர்ந்து விட்டது. கண்ணீரைப் பொழிந்தது; பின் அதுவும் நின்றது. மலரைக் கூர்ந்து நோக்கிய வண்ணம் அசைவற்று உட்கார்ந்து விட்டான். அப்போது அந்த மலர் எண்ணிற்று. நம் வாழ்க்கையை இவன் குலைத்து விட்டான் என்பது உண்மைதான். செடியிலிருந்தாலல்லாமல் இந்த மக்கள் நம்மைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டார்கள். இது உண்மைதான். ஆனால், இந்தச் சிறுவனுடைய அசைவற்ற நிலைமை இப்படியே நீடித்து விடுமோ?—சிறுவனுடைய உள்ள நிலை பூவையும் கூட இரங்கச் செய்து விட்டது.

'என்னடா, எவ்வளவு நேரம் அங்கேயே இருப்பது? சினிமாவுக்குப் போகவேண்டாமா?' என்று கேட்டுக்கொண்டே வந்தாள் அவனுடைய தாய். அவள் சொன்னதொன்றும் அவன் காதில் விழவில்லை. தாயார் வந்தாள்; குழந்தையைத் தூக்கி விட்டுப் பக்கமாகத் திரும்பினாள். சிறுவனோ, அன்னையின் தோளில் பின்புறமாகத் திரும்பி மலரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்தப் பூதான், கவனிப்பாரற்று வழியிலே கிடந்தது.

* * *

சந்திரசேகரன் செல்வர் வீட்டுப் பிள்ளை. செல்வமாகவளர்ந்தவன், கவலையென்பதேபடியாத

இன்ப உள்ளம்; அப்படியே களங்கத்தின் சாயல் படராத நல்ல உள்ளம். உலகத்திலே கஷ்டங்கள் இருக்கும் என்பதுகூட அவனுக்குத் தெரியாது. கல்லூரிப் படிப்பு முடிந்தது. எம். ஏ. பரீட்சை அவனுக்கு மாகாண முதன்மையைக் கொடுத்துச் சென்றது.

மெட்ரிக்குலேஷன் தேர்வு எழுதியாய்விட்ட தென்றாலே, பணக்கார வீட்டுப் பிள்ளைகளைப் பெண் பெற்று வைத்திருப்பவர்கள் விடுவதில்லை. எத்தனையோ படையெடுப்புகளையும் தாக்குதல் களையும் வெற்றிகரமாகக் கடந்து வந்து, சந்திர சேகரன் எம். ஏ. பட்டத்தையும் வாங்கிவிட்டான். இனிமேல் படையெடுக்கிறவர்கள் சாதாரணமாகவா வருவார்கள்?

எத்தனையோ பேர்கள் சந்திரசேகரனுக்குப் பெண் கொடுக்கவந்தார்கள். பலர் 'தவங்கிடந்தனர்' என்று சொன்னாலும்கூட மிகையாகாது. என்றா லும் சந்துருவின் தந்தை ராமசாமி ஐயருக்குத் தம் நண்பர் குமாரசாமி ஐயரின் மகள்பேரில் தான் நாட்டமெல்லாம் இருந்தது. சந்துருவின் தாயார் எத்தனையோ பெண்களைப் பற்றி அவனுக்கு எடுத்துச் சொன்னாள். அவள் கவனமெல்லாம் இன்னும் அதிகமான ஆடம்பர வாழ்க்கைக்கு; நாலு பேர் மெச்சும்படியான வழிக்குத்தான் சென்றது. சந்துருவோ ஒரு பெண்ணையும் குறிப் பிட்டுச் சொல்லவில்லை. எவளோ ஒருத்தியின்மேல் காதல் கொண்டுவிட்டதால்தான் இம்மாதிரி யிருந்தான் என்று சொல்லமுடியாது. அவனுடைய மனத்திலே இதுவரை இத்தகைய விஷயங்கள் எழவில்லையென்பது இதன் பொருளல்ல. இல்லறம், மனைவி என்ற விஷயமெல்லாம் அவனுக்குப்புரியாது

லிருக்கவில்லை. ஆனால் 'காதல், பிரேமை என்பதொன்றும்' அவன் மனத்திலே அரும்பவில்லை. அவனுடைய நண்பர்கள் இதுபற்றி அவனைக் கேலி செய்வதுண்டு. அவன் நிலை அவனுக்கே விளங்காமலிருந்தது.

எத்தனையோ தை மாதங்கள் பிறந்து பிறந்து போனமாதிரி அந்த வருஷத்திலும் ஒரு தை மாதம் வந்தது. ஒரே ஒரு விசேஷம், சந்திரசேகரனுடைய வாழ்க்கையைப் பொறுத்த வரையில் அந்த மாதத்தில் நடந்தது. வேறென்ன விசேஷம்! செல்வி-சரஸ்வதி குமாரசாமி, ஸ்ரீமதி சரஸ்வதி சந்திரசேகரனாக மாறியது அந்த மாதத்திலேதான். சந்துருவின் அம்மாவுக்கும் பிடித்த இடமாகப் போய்விட்டதால் ஒரு வகையான குறைவுக்கும், தடைக்கும் இடமில்லாமல் திருமணம் நடந்தேறியது.

எல்லாவிதப் பொருத்தங்களும் இருந்த அந்த வாழ்க்கையைப் பற்றி, அதைப் படைத்த பிரமனுக்கே சந்தேகம் வந்துவிட்டது. நல்ல அருமையான கவிதையை இயற்றிவிட்டு 'நாமா இவ்வளவு அருமையாகப் பாடிவிட்டோம்' என்று சந்தேகப்படும் கவிஞனைப் போலப் பிரமனும் சந்தேகப்பட்டான். கவிஞன் தன் நண்பன் ஒருவனிடம் தான் பாடிய பாட்டைக் காட்டினான். காட்டியதன் பயன், கவிதையின் வாழ்வு முடிவடைந்துவிட்டது. 'அது பிழை, இது பிழை; ஒன்றும் சாரமில்லை' என்று சொல்லி அந்த நண்பன் கிழித்து எறிந்துவிட்டான். கவிஞன் கண்ணீர் விட்டான்; விட்டுக் கொண்டேயிருந்தான்.

சந்துருவின் உடல் நிலையில் ஏதோ கோளாறு; எப்படியோ அது வளர்ந்தது........பெருக்குவது ஏன்? அவன் சரசுவின் முகத்தை நோக்கவும்

அஞ்ச வேண்டிய காலம் நெருங்கிவிட்டது. அவளை மனக்கண்ணால் பார்த்துப் பார்த்துப் புறக்கண்ணால் அருவியாக நீர் பொழிந்துகொண்டேயிருந்தான். மனக் கவலை அவனை அரித்து விட்டது. துன்பத்தின் வெங்கதிர் கண்ணீரை வற்றச்செய்து விட்டது. சரசுவை வெறித்த கண்கொண்டு நோக்குவான்; மூடிக் கொள்வான். அந்த வெறிச்சென்ற பார்வையில் எத்தனையோ துன்ப அலைகள் வீசின. ஆனால் வெளியே தெரியவில்லை. தாய் தந்தையருக்கு அந்தப் பார்வையின் பொருள் புலப்படவேயில்லை. ஒரு குறைவுக்கும் இடம் வைக்காமல் வளர்த்த பிள்ளை, வாழ்க்கை முழுவதுக்கும் பெரிய குறையாக வைத்துவிட்டுப் போய்விடுவான் என்று அந்தப் பெற்ற மனங்கள் எண்ணவேயில்லை. சரஸ்வதியின் மனத்திலே மட்டும் அந்தக் கண்ணலையின் வெம்மை சிற்சில சமயங்களில் தாக்கிற்று. ஆனால், அந்தச் சமயங்களில், பொங்கியெழும் கண்ணீரை இமையை விட்டு மீறி வந்துவிடாமல் நிறுத்தி விடுவாள். எப்படித்தான் நிறுத்தினாளோ, தெரியவில்லை. ஒரு பெருமூச்சு, அதுவும் அடுத்து இருக்கும் மாமன் மாமியருக்குத் தெரியாமல் வரும்; உடனே அங்கு நிற்காமல் போய்விடுவாள்.

ஒரு நாள் மாலை; ராமசாமி ஐயரின் வீட்டில் குத்துவிளக்கு அணைந்தது. சரஸ்வதியின் வாழ்க்கையிலே இருள் கவிந்தது. இருளின் செறிவிலே, அவள் குங்குமத்தை யாரோ அழித்துவிட்டார்கள். தாலிக் கயிற்றையும், கூந்தலின் மலரையும் சரசு இழந்தாள். இருளைக் கண்டதும் வெளிறிய அவள் முகத்தில் பழைய மஞ்சள் நிறம் வருவதற்குத் தைரியத்தை இழந்தது. இருளிலே பேரிரைச்சல்; சரசுவின் மனத்திலே பெரும் புயல். இரைச்சலெல்

லாம் 'விதவை' 'விதவை' என்றது; புயலெல்லாம் துன்பம், கொடுந் துன்பம், பாலை, பெரும் பாலை என்று கூச்சலெழுப்பியது...........

கிழவி ஒருத்தி சொன்னாள்: மங்கலியம் கட்டும் போது ஒரு கையிலிருந்த கயிறு தவறியது. அப்போதே சொன்னேனே, ஏதாவது பிராயச் சித்தம் செய்திருக்கக் கூடாதா?....இப்படியெல்லாம் வருமென்று தெரிந்துதானே சொன்னேன்....காலம் கெட்டுப் போச்சு" என்று காலத்தைப் பழித்தாள்.

பிரமன் தன் சந்தேகத்தைத் தீர்க்கக் காலனை அணுகினான். அவன் கவிதையைக் கிழித்தெறிந்தான் பிரமனின் கண்ணீர் காலனைப் பழித்தது.

தை பிறந்தது; இன்னொரு தை. இதற்குமுன் வந்த தையில்தான் சந்திரசேகரனும் சரஸ்வதியும் ஒன்றாகத் தைக்கப்பட்டார்கள். மறு தை வருமுன் தையல் விட்டுவிட்டது. தையல் மோசம் போனது. தையல் இலையில் ஓர் இலை எங்கோ பறந்து விட்டது; மற்றொன்று தைத்த வீட்டிலேயே கவனிப்பாரற்றுத் தனியே ஒரு மூலையில் கிடக்கிறது.

பணத்துக்குக் குறைவில்லை; செல்வாக்குக்குக் குறைவில்லை. பெரிய பங்களா, வேலைக்காரர்கள் கார்.......எல்லாம் இருந்தன. உணவின்போது எதிரொலி செய்யும் கலகலப்பு, 'சரசு' என்று தனியான இனிமை பெற்ற ஒரு குரல்—இதுதான் அந்த வீட்டிலே இல்லை. எத்தனையோ உறவினர்கள் வீட்டிலே கல கலப்பாய் வந்து சரசுவோடு இருக்கிறார்கள். எத்தனையோ பேர் அவளைப் பரிவோடு அழைக்கிறார்கள். ஆனால்—அவள் உள்ளம் பாலையாகத்தான் இருக்கிறது. மஞ்சளும் பூவும் போனபின், குங்குமம் இழந்தபின், எத்தனைபேர் வந்தென்ன? ஏதாவது பயனுண்டா? ஒரே ஒருமஞ்

சள் கயிறு நீங்கியபின் எத்தனை தங்க நகைகள் இருந்தும் பயனுண்டா? கவலை அவள் மனத்தை அரித்தது.

குமாரசாமி ஐயர் தம் மகள் முகத்தைப் பார்க்கவும் விரும்பவில்லை. மனத்திலே எழுந்த கொந்தளிப்பு அவரைத் தலைகுனியச் செய்தது. 'சந்துரு ஐ.ஸி.எஸ். படிக்கப் போகிறான். பிறகு திரும்பி வருவான். அடடா, நம்மகள் எவ்வளவு செல்வாக்குடனும் செல்வத்துடனும் வாழ்வாள்' என்றெல்லாம் எண்ணிப் பத்தாவது படித்தது போதுமென்று படிப்பை நிறுத்திக் கலியாணத்தைச் செய்து வைத்தார். மேலும் மேலும் படிக்க நினைத்த சரசுவிடம் "குழந்தை, உனக்கு ஒன்றும் தெரியாது. சந்துருவைப் போல வரன் வரும்போது விடக்கூடாது" என்று என்னென்னவோ சொல்லி மகளைப் பங்களா வாழ்க்கைக்கு அனுப்பிவிட்டார். அந்தப் பங்களாவிலே நெருப்புப் பற்றப்போகிறது என்பது அவருக்கு அப்போது எப்படித் தெரியும்! அங்கே பிடித்த நெருப்பு குமாரசாமி ஐயரின் அடிவயிற்றிலும் பிடித்துக்கொண்டது. சரசுவின் வாழ்க்கையில் தோன்றிய பாலையின் துன்பம் அவள் தாய்க்குத் துயரக் கடலின் ஆழத்தைக் காட்ட முனைந்தது.

ராமசாமி ஐயரும், அவர் மனைவியும் அன்று சரசுவின்மேல் கொண்ட அன்பையெல்லாம் பகைமையாக மாற்றிவிட்டனர். அவர்கள் என்ன செய்வார்கள்? மகன் சாவினால் ஏற்பட்ட துன்ப வெறியிலே 'புருஷனை விழுங்கிய பாதகி' 'கணவனை உருட்டிய காதகி' என்றெல்லாம் பட்டங்கள் கொடுத்துப் பிறந்த வீட்டுக்கு அனுப்பி விட்டனர்.

இரண்டு ஆண்டுகள் கழிந்துவிட்டன. யார்

எப்படி யெப்படி யிருந்தாலும் காலண்டரின் தாள்கள் கிழிந்துகொண்டுதானே இருக்கின்றன!

குமாரசாமி ஐயருக்கு ஒரு யோசனை தோன்றியது. 'சரசுவதியைக் கல்லூரிக்கு அனுப்பினால் என்ன? தம் மனைவியோடு ஆலோசனை செய்தார். புக்ககத்திலிருக்கும் மாமனும் மாமியும் பழிப்பார்களே, ஊரிலுள்ளோர் தூற்றுவார்களே என்றெல்லாம் உலகப் பாடம் படித்தாள்; சரசுவின் தாய். 'புக்ககத்திலிருந்து தம் அருமை மகளை விரட்டியடித்த சம்பந்திகளைப்பற்றிக் குமாரசாமி ஐயர் கவலைப்படவில்லை. "அவர்கள் பணம் இங்கு வந்து ஆகவேண்டியது ஒன்றுமில்லை. நம்மிடமிருக்கும் சொத்து சரசுவுக்குப் போதும்" என்று சொல்லி விட்டார். ஊராருக்கு என்ன, அவர்கள் எப்போதும் ஏதாவது சொல்லிக்கொண்டுதான் இருப்பார்கள்!

சரசுவுக்கும் கல்லூரிக்குப் போகலாம் என்றுதான் பட்டது. படிப்பிலே மனத்தைச் செலுத்த நினைத்தாள்; அதிலே கவலையைக் கரைக்க எண்ணினாள். சரசுவதி கல்லூரியில் சேர்ந்துவிட்டாள். படிக்கிறாள்...........

* * *

கீழே விழுந்து கிடந்த மலர் என் கண்ணில் பட்டது. குனிந்தேன்; எடுத்துக் கண்ணில் ஒற்றினேன். உடன் படிக்கும் நண்பன் கூட இருந்தான். "செடிகளிலே எத்தனையோ மலர்கள் பூத்துக் குலுங்கி இருக்க, கீழே கிடக்கும் பூவைப் போய் எடுத்தாயே, பயித்தியம்!" என்று 'காரண காரிய'ப் பேச்சுப் பேசினான்.

மலர் ஒன்று சொல்லிற்று: "உலகம் அப்படித்தான். அதைப்பற்றி நினைக்கவேண்டாம். நான் உன் அன்புக்குரிய மலர்; நீ என் மணத்துக்குரிய அன்பன்....ரசிகன்"

# "தீ."

— க. தங்கவேலன்

திக்கெட்டும் பாய்ந்தெழுந்து தீமையெலாம் சுட்டெரித்து
முக்கணொரு பித்தன் முகத்திற்கண் ணாகியதீ!
மாருதியின் வாலினிலே மாறிப் பறந்தெழுந்து
ஈரமிலா நெஞ்சன் இலங்கை கொளுத்திய தீ!
பண்டு நெடுஞ்செழியன் பாதகத்தால் பத்தினிபால்
மண்டி யெழுந்து மதுரை பொசுக்கிய தீ!

நெஞ்சில் உரமிருந்தும் நீணிலத்தில் நாதியற்றுக்
கஞ்சிக் கலைந்து கதறுகின்ற நற்கலைஞர்
பஞ்சத்தில் சாகப் பணக்கோட்டைக் குள்வளரும்
நெஞ்சத் துரோகிகளை நீருக்கும் தியாகத் தீ!

தங்கக் குடிலும் தலைசாய்க்கப் பாயுமின்றி
மங்கா மணிமக்கள் மண்டைசுடும் வெய்யிலிலே
வெந்து கருக விசை விசிறிக் காற்றுடைய
சிந்தைச் செருக்கர்களைச் சீரழிக்கும் தியாகத் தீ!

நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டுப்
பெற்றசிறு கூலியையும் பித்தேற்றிக் கொள்ளையிடக்
கள்ளு சாராயமுதல் கஞ்சாக் கடைவிரிக்கும்
கொள்ளைமுத லாளிகளைக் கொன்றெரிக்கும் தியாகத் தீ!

உண்மைத் தொழிலாளர் உள்ளம் குமுறியெழத்
திண்மை மனம்படைத்த தேசபக்தர் நெஞ்சுருக
ஆண்டகை மக்கள் அகம்புழுங்க வெய்யசிறைக்
கூண்டுக்குள் பொங்கிக் கொழுந்துவிடும் தியாகத் தீ!

பத்தினிமார் கற்புக்கோர் பாழ்நேரும் காலத்தும்
சித்தமெய்ஞ் ஞானியர்கள் சிந்தைநொந்த காலத்தும்
சத்தியத்தின் சக்தி சலித்தெழுந்து கொக்கரித்துத்
தித்தித்தோ மென்று திளைத்தாடும் தியாகத் தீ!

கோட்டை சிதைந்தொழியக் குடிசைக்குள் பொங்கிய தீ
பூட்டை உடைத்தெறியப் புந்திக்குள் பற்றிய தீ!
சாமியை உள்ளடைக்கச் சாம்பான் புழுங்கிய தீ!
நேமியும் வேதாவும் நிதம்வணங்கும் தியாகத் தீ!

# வீரக் கண்ணகி

ம. பொ. சிவஞான கிராமணியார்

I

சிலப்பதிகாரக் கதையைப் பின்பற்றி எழுந்த ஆராய்ச்சி நூல்கள் பலப்பல. அவையனைத்தும் கண்ணகி தேவியின் அறக்கற்பு ஒன்றையே அறிவிப்பனவாயின.

கண்ணகிக்குக் கதிரவன் சாட்சி கூறுவதும், வெட்டுண்ட கோவலனை உயிர் பெற்றெழச் செய்வதும், அக்கினி தேவன் அவள் முன் தோன்றி ஏவல் கேட்பதும், மதுரைத் தெய்வம் கண்ணகிக்குக் காட்சியளித்துப் பூர்வ வரலாறு உரைப்பதும், தேவர்களும் கோவலனும் இந்திரவிமானத்தில் வந்து அவளை வானுலகம் அழைத்துச் செல்வதும் கண்ணகியின் தெய்வீகக் கற்புக்குச் சான்றாகக் காட்டப்படுகின்றன.

ஆனால், மேற்சொன்னவையனைத்தும் கதையை அலங்கரிக்கும் கற்பனைகளேயொழிய, கதையின் கருப்பொருளல்ல. மேலும், அவை மக்களின் அறிவுக்கு எட்டாத—பின்பற்ற முடியாத—அருட் செயல்களாகும். சிலப்பதிகாரத்தை அரசியல் கண்கொண்டு நோக்குவார்க்கே அதிலுள்ள உண்மையை அறிய முடிகிறது. அவ்வுண்மை அறிவுக்குப் பொருந்துவதாயும், மக்களால் பின்பற்றக் கூடியதாயும், தற்காலத்திற்குத் தேவையானதாயும் இருப்பதை உணர்கின்றோம்.

---

திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் எழுதிய "வீரக் கண்ணகி" என்ற நூலின் சுருக்கம். விரிவை நூலில் காண்க;

சிலப்பதிகாரம் மூன்று காண்டங்களாக அமைந்துள்ளது. அதில் சிலம்பைக் காரணமாகக் கொண்டு கதை நிகழ்வது மதுரைக் காண்டத்தில் தான். அந்தக் காண்டத்தின் இறுதியிலேயே கதை முடிந்தும் விடுகிறது. ஆகவே, புகார்க் காண்டத்தைக் கதைக்கு முன்னுரையாகவும், வஞ்சிக் காண்டத்தை முடிவுரையாகவுமே கொள்ளவேண்டும்.

இதன்படிப் பார்த்தால், கதையின் உண்மையை மதுரைக் காண்டத்தில்தான் ஆராய்தல் வேண்டும். அதுவும் அறிவுக்கும் அனுபவத்துக்கும் பொருந்தும் செயல்களை ஆதாரமாகக்கொண்டு கதையின் உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டுமே யொழிய வெறும் கற்பனைகளை நம்பி இடர்ப்படுவது கூடாது.

இனி, மதுரைக் காண்டத்தை ஆராய்வோம். குற்றமற்ற கோவலனைக் கள்வனெனப்பொற்கொல்லன் சொன்னதை நம்பி, அவனைக் கொலை செய்யுமாறு பாண்டியன் நெடுஞ்செழியன் ஆணையிடுகிறான்.

கோவலன் கொலையுண்டதை அறிந்த கண்ணகி நேரே கொலைக்களம் செல்கிறாள். அங்கே கோவலன் தலை வேறு, உடல் வேறாக வெட்டுண்டு ரத்தத்தில் மூழ்கியிருப்பதைக் கண்டு ஆத்திரங் கொள்கிறாள். இந்த அநீதிக்குக் காரணமான அரசனை அணுகி அவனுடன் வாதப்போர் செய்து அவனது செங்கோல் கொடுங்கோலாக ஆனதை மெய்ப்பிக்கிறாள். இதனால் அரசன் உயிரிழக்கவும் அவனது அரசு அழியவும், கண்ணகி காரணமாவதுடன் கொடுங்கோலாட்சிக்கு உட்பட்டமைக்காக மதுரையையும் தீக்கிரையாக்குகிறாள். இதுதான் கதையின் முக்கிய அம்சங்கள்.

சிலப்பதிகாரக் காலம்வரை அரசன் தவறிழைத்தால் அவனுக்கு எதிராகக் குடிமக்கள் கிளர்ச்சி செய்வதென்ற எண்ணமே தமிழர்களுக்கு இருந்ததாகத் தெரியவில்லை.

தமிழரது அரசியல் நெறியை அறிவிக்கும் திருக்குறளிலும்,

இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும்.

"அந்தோ! எங்கள் அரசன் கொடியவன்" என்று மக்கள் மனநொந்து கூறுவார்களாயின், அதுவே அவ்வரசன் அழியப் போதுமானது என்கிறார் திருவள்ளுவர்.

அரசன் தவறிழைத்தால் அவனை அழிக்கும் உரிமை கடவுளின் அருட் சக்திக்கே உண்டு; ஜன சக்திக்குக் கிடையாது. அந்த அருட் சக்தி வெளிப்படும்வரை ஜன சக்தி அக்கொடுங்கோல் மன்னனுக்கு அடங்கியே வாழவேண்டும். இதுதான் அக்கால மக்களின் அரசியல் நெறி போலும்!

சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் இதிலிருந்து மாறுபட்டு அரசு தவறிழைத்தால் அதை எதிர்த்து அழிக்கும் உரிமை மக்களுக்கு, அதிலும் பெண்களுக்கு உண்டு என்ற அரசியல் புதுநெறியை, புரட்சி வழியைத் தமிழ் மக்களுக்குப் போதிக்கவே சிலப்பதிகாரத்தை இயற்றியுள்ளார்.

இளங்கோ காட்டிய இந்தப் புரட்சி வழியைத் தான் பிற்காலத்தில் உலக நாடுகள் பலவற்றிலும் மக்கள் கையாண்டனர் என்பதைச் சரித்திரம் நமக்கு அறிவிக்கிறது. கால வேறுபாட்டால் முறைகள் மாறிவிட்டன என்றாலும் தத்துவம் அதேதான்.

இனி, மதுரைக் காண்டத்தில் கண்ணகி நிகழ்த்தும் புரட்சியை விரிவாகக் காண்போம்.

II

போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
வாரலென் பனபோல் மறித்துக்கை காட்டப்
புறஞ்சிறை மூதூர் புக்கனர்............

"கோவலன் தம்பதிகளே! வாராதீர்! வந்தால் துன்புறுவீர்!" என்று பின்வருவனவற்றை முன்னறிந்து அறிவிப்பனபோல் மதுரை நகரின் மதில்கள்மீது கொடிகள் அசைந்தாட, கண்ணகியும், கோவலனும் கீழ்த்திசை வாயிலிற் புகுந்து புறஞ்சேரியை அடைந்தனர்.

அங்கு மாதரியின் இல்லத்தில் கண்ணகியை இருக்கச் செய்து கோவலன், அவளது காற்சிலம்பை விற்றுப் பொருள்தேட மதுரை நகரின் கடை வீதி வழியே சென்றான். சென்ற விடத்தில் பாண்டியன் நெடுஞ்செழியனின் அரண்மனைப் பொற்கொல்லன் செய்த வஞ்சகச் செயலால் கொலைக்குள்ளாகிறான்.

கோவலன் கொலையுண்ட செய்தியை மாதரியால் அறிந்த கண்ணகி வானத்தே கதிர் பொழியும் திங்கள் கார்மேகத்துடன் நிலத்தில் வீழ்ந்தாற் போல மண்ணில் வீழ்ந்தாள்.

மன்பதை அலர்தூற்ற மன்னவன் தவறிழைப்ப
அன்பனை இழந்தேன்யான் அவலங்கொண் டழிவலோ

*                *                *

செம்மையின் இகந்தசொல் தென்னவன் தவறிழைப்ப
இம்மையும் இசையொரீஇ இனைந்தேங்கி அழிவலோ

*                *                *

மறனேடு திரியுங்கோல் மன்னவன் தவறிழைப்ப
அறனெனும் மடவோய் யான் அவலங்கொண் டழிவலோ

"பாண்டி வேந்தனின் கொடுங்கோலாட்சியைப் பார்த்திருக்கும் ஏ, அறக்கடவு ளென்னும் அறிவற்றவனே! கணவனைப் பிரிந்து துன்புறும் விதவைப் பெண்டிருள் யானும் ஒருத்தியோ?" என்று அரசனின் நீதியற்ற செயலால் தனக்குற்ற துயரைக் கூறி அழுதாள் கண்ணகி.

பின்னர், ஆயர்சேரியைவிட்டு மதுரை நகரின் வீதி வழியே வரும் கண்ணகி, தன்னைப் பார்த்து நிற்கும் பெண்களை நோக்கி அரச நிந்தனைப் பிரசாரம் செய்கிறாள்.

முறையில் அரசன்றன் ஊரிருந்து வாழும்
நிறையுடைப் பத்தினிப் பெண்டிர்காள்!

என்று நீதி தவறிய பாண்டியன் ஆட்சியில் அமைதியாக வாழும் பத்தினிப் பெண்டிரைப் பரிகசிக்கிறாள். மற்றும், "கள்வனோ அல்லன் கணவன்; என்காற்சிலம்பு கொள்ளும் விலைப்பொருட்டாற் கொன்றாரே!"..........என்று கூறி, தன் கணவன் கள்வனல்லன் என்பதைப் பலரறியப் பறைசாற்றினாள்.

கோவலன் வெட்டுண்ட கொலைக்களம் சென்று, காலையில் தன்னிடம் விடைபெற்றபோது தன்னைப் பலவாறு புகழ்ந்து பேசிய கணவன், இப்போது தான் பேசியும் அவன் பேசாத நிலை கண்டு கண்ணகி ஆராப்பெருந்துயரெய்தினாள்.

யாருமில் மருள்மாலை இடருறு தமியேன்முன்
தார்மலி மணிமார்பம் தரைமூழ்கிக் கிடப்பதோ!

*　　*　　*

பார்மிகு பழிதூற்றப் பாண்டியன் தவறிழைப்ப
ஈர்வதோர் வினைகாணா இதுவென உரையாரோ!

*　　*　　*

மன்பதை பழிதூற்ற மன்னவன் தவறிழைப்ப
உண்பதோர் வினைகாணு யிதுவென உரையீரோ!

"என் கண்ணுக்கிசைந்த கண்ணாளரே! உமது பொன்மேனி புழுதியிற் புரண்டு கிடப்பதோ? பாண்டி வேந்தன் செய்த அநீதியால் நான் படுந் துயரைப் பாரீரோ?" என்றெல்லாம் நெஞ்சுநெக் குருக, கண்கள் இடையறாது நீர்பொழிய, கல்லுங் கரையக் கதறியழுதாள் கண்ணகி.

பின்னர் அவள், தனக்குற்ற துயரைப் பார்த் தும், அரசனது அநீதியைத் தன்னால் அறிந்தும் வாளாவிருக்கும் நகர மாந்தரை நோக்கி, "என் கணவனைக் கூரிய வாளால் கொல்லுவித்த கொடுங்கோலன் ஆட்சியில் கற்புடைப் பெண்டி ருண்டா? அறிவுடைச் சான்றோருண்டா? அருளு டைத் தெய்வமுண்டா?" என்று அலறினாள்.

நீதி தவறிய நெடுஞ்செழியன் ஆட்சியில் அறம் அகன்றது; அருள் மறைந்தது; கற்பு மாசுண்டது. ஆகவே, கண்ணகிக்குத் துணைபுரிவார் இல்லா தொழிந்தனர். ஆதரிப்பாரற்ற நிலையில் கண்ணகி யாரின் ஆவேசம் அதிகமாகின்றது. கண்கள் சிவந்து காய்சினம் காட்டுகின்றன. தன் கணவனைக் கொன்ற பாண்டியன்மீது வன்மங் கொள்கிறாள்.

காய்சினந் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்
தீவேந்தன் றனைக்கண்டித் திறங்கேட்பல் யான்.

"ஏனைய கற்புடைய மகளிரைப்போல் யானும் என் கணவனைக் கூடுவேன். எனினும் அந்தக், கொடியவனான பாண்டி வேந்தனைக் கண்டு என் கணவன் கொலைக்குக் காரணம் கேட்ட பின்னரே கணவனைக் கூடுவேன்" என்று கொலைக் களத்தில் தன் கணவனது ரத்தம் தோய்ந்த மண் ணில் நின்று சத்தியம் செய்தாள் வீரக் கண்ணகி.

இதன் பின்னர் கண்ணகி கொலைக்களம்விட்டு அகன்று கோவேந்தனின் அரண்மனையை நாடிச் செல்கிறாள். அங்கே ஆயுதம் தாங்கியவனாய் வீர னொருவன் அரண்மனை வாயிலைக் காக்கிறான். கண்ணகி அவ்வாயிலோனை நோக்கி,

> அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
> இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே

என்று நீதி பிழைத்த வேந்தனின் வாயிலைக் காப்பதை நிந்தித்து உரைக்கின்றாள். மற்றும்,

> இணையரிச் சிலம்பொன்றேந்திய கையள்
> கணவனை யிழந்தாள் கடையகத்தாள் என்று
> அறிவிப்பாயே! அறிவிப்பாயே!

என அடங்காக் கோபத்துடன் தெரிவிக்கிறாள்.

நீதி மன்னனின் வாயிலைக் காப்பதே காவல னின் நீங்காக் கடமை. ஆனால் இங்கே அவன் காப்பது அரச நீதியைக் கொன்றவனது வாயி லையே என்பதை நினைவூட்டத்தான், "இறை முறை பிழைத்தோன் வாயிலோயே" என்கிறாள். "குடி களுக்குத் தீங்கிழைக்கும் ஆட்சியில் சேவகம் செய் வதும் குற்றம்" என்றார் காந்தியடிகள். இந்த ஒத் துழையாமைத் தத்துவத்தைத்தான் கண்ணகியும் இங்கே கூறாமல் கூறுகிறாள் போலும்!

வாயில் காவலன் மூலம் கண்ணகியின் வரவை அறிந்த பாண்டியன், அவளை உள்ளே அழைத்து வர உத்தரவிடுகிறான். வீரக் கண்ணகி பாண்டி யன் நெடுஞ்செழியனின் சபையை நாடி அவன் முன் அச்சமின்றி அரசனுக்குரிய வணக்கமும் செய் யாது கம்பீரமாக நின்றாள்.

விரிந்து நீண்டு தொங்கும் கருங்கூந்தல்; சிவந்த கண்களில் இடையறு தொழுகும் நீர்த்தாரை; புழுதி படர்ந்த பொன்மேனி; கையில் தனிச் சிலம்பு.

இத்தகைய பரிதாபத் தோற்றமும்—பயங்கரப் பார்வையும் உடையவளாய்த் தன்முன் நிற்கும் கண்ணகியை நோக்கி, "நீரொழுகும் கண்ணையுடைய பெண்ணே! நீ யார்?" என்றான் அரசன்.

கண்ணகி, "ஆராய்ச்சியற்ற வேந்தனே! சொல்கிறேன் கேள்" என்று அரசனை நிந்தித்தவளாய், தான் பிறந்த பூம்புகார்ப் பதியின் பெருமையையும், அதை ஆண்ட மன்னர்களின் நீதியையும் தான்புகுந்த இடத்தின் பெருமையையும்பேசிய பின்னர், "நின்பால் கொலைக்களப்பட்ட கோவலன் மனைவி; கண்ணகி யென்பதென் பெயரே" என்று கூறித் தன்னை அறிமுகப்படுத்தி, தான் வந்ததன் காரணத்தையும் குறிப்பாகக் கூறினாள். கண்ணகியின் வரலாறு அறிந்த மன்னன், "பெண்ணணங்கே! கள்வனைக் கொல்லுதல் கடுங்கோல் அன்று; அரச நீதியே" என்கிறான்.

கண்ணகி, "என் கணவன் விற்க வந்த சிலம்பு என்னுடையதே; அதன் இணைச் சிலம்பு இதோ என் கையிலிருக்கிறது. இச்சிலம்பினுள் இருப்பது மாணிக்கக் கற்கள்" என்று கூறுகிறாள்.

அரசன், "என் தேவியின் சிலம்பினுள் இருப்பது முத்து" என்று பதில் பகர்ந்தான். பின்னர், தான் முன்னர்க் கோவலனிடமிருந்து பெற்ற சிலம்பைத் தருவித்துச் சபைமுன் வைத்தான்.

தனது ஆற்றொணாப் பெருந்துயருக்குக் காரணமாக இருந்த அச்சிலம்பைக் கண்டதும் கண்ணகி ஆவேச முற்றவளாய், அதை எடுத்து அரசன் முன் வீசி எறிந்தாள். சிலம்பு உடைபட அதிலிருந்து மாணிக்கக் கற்கள் தெறித்தன. வெளிப்படவே,

அது கண்ணகியின் சிலம்பே என்பதை மன்னன் அறிந்தான். தான் கோவலனைக் கள்வன் என்று கூறியது பொய். அவனிடமிருந்து சிலம்பைப் பெற்றது களவுக்குச் சமம். அவன் உயிரைப் போக்குவித்தது அரச நீதியல்ல; இரக்கமற்ற படுகொலை—என்பதை உணர்கிறான் நெடுஞ்செழியன். அப்போதே அவனது தண்ணளிக்குச்சான்றான வெண்கொற்றக் குடை சாய்ந்தது. நீதிக்குச் சாட்சியான செங்கோல் கையிலிருந்து நழுவியது. பாண்டிய மரபில் நீதிவாய்ந்த மன்னர்களையே சுமந்துவந்த அரியாசனம், நீதி தவறிய நெடுஞ்செழியனைச் சுமக்க மறுப்பதுபோல் ஆட்டங் கண்டது. இந்நிலையில் பாண்டியன் நடுக்குற்ற உடலுடன் நாக்குழறியவனாய்,

> "பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
> யானோ அரசன்? யானே கள்வன்!
> மன்பதை காக்கும் தென்புலங் காவல்
> என்முதற் பிழைத்தது கெடுகஎன் ஆயுள்"

என்று கூறிக்கொண்டே அரியாசனத்திலிருந்து உருண்டு கீழே விழுந்து உயிர் நீத்தான். பழியறியாப் பாண்டிய மரபுக்குத் தன்னால் உண்டான பழியைத் தன் உயிர் கொடுத்தே போக்கினான் பாண்டி வேந்தன்.

அரசனது நிலையை அவனுடன் அமர்ந்து கவனித்துவந்த பாண்டிமாதேவி தன் முன் ஆவேசங் கொண்டவளாய் நிற்கும் கண்ணகியின் காலில் விழுந்து, தன் கணவனது குற்றத்தை மன்னிக்குமாறு வேண்டினாள். பாண்டியன் இறந்த பின்னரும் கண்ணகியின் கடுஞ்சினம் தணிந்தபாடில்லை. பாண்டிமாதேவியின் கண்ணீரும் அவளது சினத்தீயை அணைக்கச் சக்தி

யற்றுவிட்டது. கண்ணகி தேவியார் தன் காலடியில் கிடக்கும் அரசியை நோக்கி, புகார்ப்பதியில் தோன்றிய பத்தினிப் பெண்களின் பெருமையையெல்லாம் கூறி, அத்தகைய,

மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்
பட்டாங்கு யானுமோர் பத்தினியே யாமாகில்
ஒட்டேனரசோடு ஒழிப்பேன் மதுரையையுமென்
பட்டிமையுங் காண்குறுவாய் நீ.........

என்று சபதம் செய்து அரண்மனைக்கு வெளியே வீதியில் வந்து நின்றாள்.

மதுரையம்பதி மக்கள் தங்கள் தங்கள் மாளிகைகளில் இருந்துகொண்டு கடுஞ்சினம் கொண்ட கண்ணகி தேவி இன்னும் என்னவெல்லாம் செய்வாளோ என்றெண்ணி ஏங்குவாராயினர். இந்நிலையில் கண்ணகி, தன்னை நோக்கி நிற்கும் மதுரை மாந்தரைப் பார்த்து,

"நான்மாடக் கூடல் மகளிரும் மைந்தரும்
வானக் கடவுளரும் மாதவரும் கேட்டிமின்
யானமர் காதலன் தன்னைத் தவறிழைத்த
கோநகர் சீறினேன் குற்றமிலேன் யான்"

என்று கூறி, இடது முலையை வலது கையால் திருகி எடுத்து மதுரையை மும்முறை வலம் வந்து வீதியில் விட்டெறிந்தாள். அக்கணமே மதுரை தீப்பற்றி எரிந்தது.

கண்ணகி, தன் கணவன் கள்வனல்லன் என்பதை உலகறியச் செய்துவிட்டாள். அவனைக் கொல்லுவித்த அரசை அழித்தாள். அதன் தலைநகரைத் தீக்கிரையாக்கினாள்.

இந்நிலையில், அவளது சினம் சற்றுத் தணிகிறது. ஆகவே, துர்க்கை கோயில் வாசலில் தன் கை வளையல்களை உடைத்தெறிந்த பின்னர்,

கீழ்த்திசை வாயிற் கணவனொடுபுகுந்தேன்
மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கு!

என ஆசிரியர் விவரித்தபடி, "அந்தோ காற்சிலம்பை விற்றுப் பணம்தேடி வாணிபம் செய்து வாழலாம் என்ற எண்ணத்துடன் நேற்றுக் காலைதான் கிழக்கு வாயில் வழியாகக் கணவருடன் மதுரைநகர் புகுந்தேன். ஆனால் இன்றோ பாவியேன் என் கணவனைப் பறிகொடுத்துத் தன்னந்தனியளாய் மேற்றிசை வாயில் வழியாக வெளியேறுகிறேன்" என்று நெடுங்கண்ணீர் நிலத்தை நனைப்ப அழுதவளாய், மதுரை நகர் விட்டு நீங்கிச் சென்றாள் கண்ணகி.

மதுரையை விட்டகன்ற பின்னர் இரவு பகலறியாது, மேடு பள்ளம் பாராமல், வைகைக் கரை வழியே மேற்கு நோக்கி நடந்து சேர நாட்டை அடைந்தாள். அங்கே முருகப் பெருமான் வைகும் நெடுவேள் குன்றம் என்னும் திருச்செங்கோட்டு மலைப்பக்கம் வந்து அதன்மேல் ஏறி வேங்கை மரமொன்றின் நிழலில் நின்றாள் கண்ணகி.

மேற்சொன்னவற்றிலிருந்து சிலப்பதிகாரம் அநீதிவயப்பட்ட அரசை அழிக்கும் புரட்சி உணர்ச்சியை மக்களுக்கு, சிறப்பாக பெண்களுக்குப் போதிப்பதற்காகவே எழுதப்பட்ட அரசியல் புரட்சி நூல் என்பதை எளிதில் உணரலாம். எனவே, அதில் நமக்குக் காட்சியளிப்பவள் மறக் கற்புடைய வீரக் கண்ணகியே யாவாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

# தமிழ்க் கருவூலம்

சி. வேங்கடசாமி

மனிதன் எண்ணத் தெரிந்தவன்; உணர்வு நிரம்பியவன். அவன் அறிவும் மனமும் கூர்தல் அறத்தை ஒட்டி முறையே நுணுகியும் வளம்பட்டும் செல்வது இயற்கை. நுட்பம் செறிந்த அறிவும் தூய்மையே வடிவான உள்ளமும் பெற்றவனே மக்களுள் சிறந்தவன். அவ்வுயர் நிலையை அடைய முயல்வதே வாழ்க்கையின் குறிக்கோளாதல் வேண்டும் என்பதே அறிஞரின் ஆணை.

ஆணையிடும் அறிஞர்கள் அதை அடையும் வழியைக் காட்ட மறக்கவில்லை. பண்பட்ட உள்ளத்தின் திறனை விளக்கி நம்மை உயர்த்தவும், நுட்ப அறிவின் மேம்பாட்டைக் காட்டி இன்புறுத்தவும் சில வாழ்க்கை ஓவியங்களைத் திரட்டித் தந்துள்ளனர். அத் திரட்டே அகநானூறு என்னும் ஓவியத் தொகுப்பு: கலைக் கூடம்; வாழ்க்கை நூல்.

உணர்வின் பெருக்கமும் அறிவின் நுணுக்கமும் காதல் துறையிலேதான் எளிதில் எல்லோருக்கும் கைகூடும் என்பது யாவருமறிந்த உண்மை. உயர்ந்த நாகரிகத்தின் சிறந்த பண்பு நுட்பமே யாகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மக்களின் உள்ளங்கள்—பண்பட்ட மனங்கள் இன்றும் நம்முன் தோன்றுகின்றன. ஆனால் அவற்றை அறிந்து இன்புறத் தமிழ்க் கண் வேண்டும். இன்றேல் அவற்றின் களி நடங்களைக் கண்டு களிக்க இயலாது.

அகநானூறு' என்றதைக் கேட்டதும் 'புரியாது' என்று புறக்கணிப்பவர் பலர். 'என்ன இருக்கிறது' என்று ஏளனம் செய்பவர் சிலர். இவ்விரு திறத்தாரையும் கண்டு புன்னகை பூக்கின்றது அகநானூறு, முன்னவரின் 'தொன்னூற் கஞ்சித் தடுமாறுளத்தைக் கண்டும், பின்னவரின் 'மேதை' யை வியந்தும்.

அழகிய காட்சிகள்; சாதாரணமாக எக்காலத்திலும் மக்களிடையே நிகழும் சில நிகழ்ச்சிகள்; நுட்பம் செறிந்த பேச்சுக்கள்; இவையே அகநானூற்றில் காணப்படும் பொருள்கள். இயற்கையான தமிழ்நடை; உணர்ச்சியைக் கூட்டியும் பெருக்கியும் கூறுமல் அப்படியே வடித்துக்காட்டும் முறை; ஆளப்பட்டுள்ள சொற்றொடர்கள்மிகப்பழையனவாதலின் அவற்றின் பொருளுணர்தல் முதலில் ஒரு சிறிது கடினமாளுலும், பயிலப் பயில அவற்றின் எளிமையும், ஆழமும், இயற்கை வனப்பும் சுவைத் துணரப்படும். உதாரணமாக இரண்டடிகளேப் பார்ப்போம்.

தலைவன் அயலூருக்குப் போனன். அங்கே தன் கடமையைச் சரிவர முடித்துக் கொண்டான். தன்னுடைய அழகான தேரில் ஏறிக்கொண்டு வீட்டை நோக்கி விரைவாகத் திரும்புகிறன். வரும் வழியில் ஒரு காட்சி. அதைக் கண்ட அவன் உள்ளத்தில் ஒரு நெகிழ்ச்சி. அதன் காரணமாக அவன் செய்த ஒரு சிறு பணி. இவற்றையெல்லாம் நம்மைக் கூர்ந்து கவனிக்கச் செய்து அவன் உள்ளத்தை நமக்குத் திறந்து படம் பிடித்துக் காட்டுகிறார் ஒரு புலவர்.

காட்சி வேறென்றுமில்லை; தேன் வண்டுகள் இன்னிசை பாடிக்கொண்டே தேனே உண்டு

துணையோடுகூடி இன்புற்றுத் தம்மை மறந்திருக்கின்றன. அதைக் கண்ட தலைவன் மனமும் இன்பத்தில் ஆழ்கின்றது. உடனே அவனுக்கு நடுக்கம் தோன்றுகின்றது. யானையைக் கண்டால் தோள் பூரித்து அம்பெய்யும் வீரன் அவன். மற்ற காட்டு விலங்குகள் இருக்குமிடம் தேடி அவற்றை வெருட்டி ஓட்டிவேட்டையாடும் தோள்வலிகொண்ட தீரனவன். அத்தகையவன் உள்ளம் இங்கே அஞ்சுகின்றது என்று அழுத்தமாகக் கூறுகிறார் புலவர். காரணம் என்ன?

அவன் தேர் பலவிதமாக அணிசெய்யப்பட்டிருந்தது. அவன் வருகைக்கு எக்காளமிடுவதற்காகப் பல மணிகள் அதில் கட்டப்பட்டிருந்தன. அவற்றின் ஒலி செவிக்கினிதாய் இருப்பினும் தேனுண்டு இன்பத்தில் திளைத்திருந்த வண்டுகளுக்கு அச்சம் விளைவிக்கும்; அதனால் அவை வெருண்டோடும். இதை எண்ணிப்பார்த்த அவன் அன்புள்ளம் நெகிழ்ந்தது. அங்கே அச்சம் பிறந்தது.

பிறர் இன்புறக் கண்டு மகிழ வல்லவனே இன்பமாய் வாழத் தகுதியுடையவன். பிறருக்குத் துன்பம் செய்துவிட்டுத் தான் மாத்திரம் இன்பமடைய விரும்பும் ஒருவனுக்கு வாழ்க்கையில் என்றும் இன்பம் இருக்க முடியாது. பிறர் துன்புறுவதைக் கண்டு மனம் பொறுது தம்மாலான உதவியை விரைந்து செய்வதே உயர்ந்த மக்களின் இயல்பு என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

பண்பட்ட உள்ளம் ஒரு கணம் அஞ்சி நெகிழ்ந்ததாயினும், 'அதற்கு நாம் என்ன செய்யலாம்' என்று திண்ணை வேதாந்தம் பேசத் தலைவன் அறிவு இடங் கொடுக்கவில்லை. உடனே ஒரு தக்க

செயலை மேற்கொண்டான். அவன் உள்ளத்தில் மீண்டும் மகிழ்ச்சி பொங்கிற்று. பெருமிதமும் உடன் தோன்றிற்று. அவன் மாண்பு நிறைந்து பொலிந்தான் அந்தச் சிறு செயலால் என்று கவிஞர் அழகாகக் கூறுகிறார்.

தலைவன் என்ன செய்தான்? அவன் செய்த 'மாண்வினை' என்ன? தன் தேரின் மணி ஒலித்து அதனால் வண்டுகளுக்கு அச்சமூட்டா வண்ணம், மணியின் நாவை ஒரு கயிற்றால் கட்டிவிடுகின்றான். மணி ஒலிக்காமல் தடைப்பட்டு விடுகின்றது.

இது மிகச்சிறிய நிகழ்ச்சி. ஆயினும், இதிலிருந்து பெறப்படும் பொருள்களோ மிகச் சிறந்தவை. இப்போது பாட்டைப் பார்ப்போம்

"தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணி நா ஆர்த்த மாண்வினைத் தேரன்" (அகம் 4 வரி 11-12)

(தாது - தேன், பறவை-இங்கே வண்டு. தேரன். தேரை உடைய தலைவன், அஞ்சி-அருளால் அஞ்சி என்று பழைய உரையாசிரியர் கூறி இருப்பது அறிந்தின்புறத்தக்கது.)

வீண் அடைமொழிகளைக் காணமுடியாது. மிகச்சில சொற்களாலேயே விழுமிய பொருள் களை எடுத்துக் கூறும் ஆற்றல் அகநானூற்றுக்கு உண்டு. பலமுறை இவ்விரண்டடிகளைப் பாடினால் அவற்றில் மிளிரும் பொருள் ஆழமும் சொல்லினிமையும், தொடர் எளிமையும் நன்கு விளங்கும்.

இத்தகைய பாடல்கள் பல சேர்ந்த மூல பண்டாரம்—தமிழ்க் கருவூலம்—அகநானூறு. இக் கருவூலத்தை நாம் எப்பொழுதும் மூடியே வைத்திருக்கப் போகிறோமா?

# தமிழ் முரசு

மாதமொரு புத்தகம்

பதிப்பாசிரியர் :

ம. பொ. சிவஞான கிராமணி

இரண்டாவது தொகுப்பில்

நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை

T. P. மீனாட்சி சுந்தரம் பிள்ளை

ரா. பி. சேதுப்பிள்ளை

இளவழகனார்

வெ. சாமிநாத சர்மா

ம. பொ. சிவஞான கிராமணி

C. M. ஜனார்தனம்

முதலியோர் எழுதுகிறார்கள்

பிரதி விலை அணா நான்கு. வருட சந்தா ரூபாய் மூன்று.

எல்லா ஊர்களிலும் விற்பனையாளர்கள் தேவை

விவரங்களுக்கு :

தமிழ் முரசு பதிப்பகம்,

233, லிங்கி செட்டித் தெரு,

ஜி. டி., சென்னை. 1.

# வீரக் கண்ணகி

ஆக்கியோன் ம. பொ. சிவஞான கிராமணி

●

சிலப்பதிகாரத்தை அரசியல்
நோக்குடன் ஆராய்ந்து
எழுதப்பட்ட ஓர் அரியநூல்

*

கண்ணகியின் புரட்சி, பாண்டியன்
நெடுஞ் செழியன் செங்கோன்மை,
பழந்தமிழ் மக்களின் அரசியல் நெறி
ஆகியவைகள் விரிவாக ஆராயப்
பட்டுள்ளன

*

விரைவில் வெளிவரும்

●


தமிழ் முரசு பதிப்பகம்,
238, லிங்கி செட்டித் தெரு,
ஜி. டி., சென்னை 1.

Cover page printed at Vani Printing Works, 156, Rasappa Chetty St., Park Town, Madras